# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 35.

## பூரி கலந்த தானியம்.

நான் டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த பொழுதுதான் எனக்கு இதற்கு முன் தோன்றாத ஒரு யோசனையை காலன் பார்க் எடுத்துக் காண்பித்தார். முன் கூறியபடி அப் பண்ணையிலுள்ள சில பிள்ளைகள் கெட்ட நடவடிக்கையுள்ளவர்களாகவும், கட்டுப்படாதவர்களாயு மிருந்தனர். அச் சிறுவர்களில் சிலர் சோம்பேறிகளாகவு மிருந்தனர். அச் சிறுவர்களுடன் என் மூன்று குழந்தைகளும் என்னைப்போன்றவர்களின் மக்களும் கலந்து கொண்டு பிரதிதினமும் விளையாடி வந்தனர். இவ் விஷயத்தைக் குறித்து காலன்பார்க் மிக்க மனச் சஞ்சல மடைந்தார். மேலும் என்மக்களையே இப்படி விட்டு வைப்பது அவருக்கு அடாத காரியமாகத் தோன்றிற்று.

ஒரு நாள் அவர் இவ்விஷயத்தைப் பற்றி என்னிடம் சர்ச்சை செய்தார். 'உம் சிறுவர்களை இக்கெட்ட பிள்ளைகளின் சேர்க்கையில் நீர் விட்டுவைப்பது என் மனதிற்குச் சற்றும் பிடிக்கவில்லை. இச்செய்கையானது கடைசியில் சகவாச தோஷத்தினல் நமது சிறுவர்களையும் கெட்ட நடத்தைக்குட்படுத்தல் கூடும்' என்று மொழிந்தார்.

அவர் சொன்ன விஷயம் அச்சமயத்தில் என் மனச் சஞ்சலத்துக்குட்படுத்தியதோ இல்லையோ எனக்கு ஞாபகமில்லை. ஆனல் நான் அவருக்கு மொழிந்த விடை மாத்திரம் என் நினைவுக்கு வருகிறது.

என் மக்களுக்கும் சோம்பேறிப் பையன்களுக்கும் உள்ள வித்தியாசத்தை எப்படி யான் அறிவேன்? இருதாத்தாரின் க்ஷேமத்துக்கும் யான் பொறுப்பாளி யல்லவோ ? இச்சிறுவர்கள் நான் அழைப்பதின் பொருட்டல்லவோ இங்கு வந்தனர் ? இப்பொழுது அவர்களுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்துவிடும் பட்சத்தில் அவர்கள் உடனே ஜோகன்ஸ்பர்க்குக்கு ஓடித் தங்கள் பழைய வழக்கத்தில் இறங்கி விடுவார்கள். உண்மையை உரைக்கில், இச்சிறுவர்களின் தாய் தந்தையர் இவர்கள் இங்கு வருவதால் இவர்களுக்காக நான் கடமைப்பட்டவன் என்று நினைத்திருக்கலுங் கூடும். இங்கு இம்மக்கள் எவ்வளவு அசௌகரியங்களையும் பொறுத்துக் கொண்டிருக்கிறார்களென்பது உமக்கும் எனக்கும் தெரிந்த விஷயம்.

ஆயினும் நான் செய்யவேண்டிய கடமை எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் இச்சிறுவர்களை இங்கேயே வைத்துக்கொண்டு என் மக்களையும் இவர்களுடன் கூடி வசிக்க நான் ஏற்பாடு செய்யப்போகிறேன். என் மக்கள் மற்றைய சிறுவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்பதை யான் அவர்களுக்கு போதிக்க நீரும் விரும்பமாட்டீரென்று நினைக்கிறேன். இவ்விதமான உணர்ச்சி அவர்களுக்குண்டாயின் அவர்கள் மற்றையவர்களினின்று வேறு படுவர். ஆனல் மற்றைச் சிறுவர்களுடன் சேர்ந்திருந்தால் நாளடைவில் என்மக்களே நன்மார்க்கமிதுவென்று அறிவார்கள்.

மேலும் அவர்களுக்கே இது நல்லது; இது கெட்டது என்கிற உணர்ச்சியும் உண்டாகும். நம் மக்களிடத்தில் நற்குணமிருப்பின் அக்குணம் மற்றைய சிறுவர்களுக்கும் படிந்துவிடும் என்கிற உண்மையை என் நாம் நம்பக்கூடாது? எது எப்படியிருப்பினும் அவர்களை இங்கு வைத்திருக்க வேண்டியது அவசியமே. அதனுல் எங்கு எவ்வளவு சங்கடங்கள் ஏற்படி[illegible] வேண்டியவர்கள்.

இதைக் கேட்ட காலன்பார்க் தன் தலையை அசைத்தார்.

இக்காரியம் நன்மையாகவே முடிந்ததென்று நான் நினைக்கிறேன். இவ்வித பரிசீலனைக்கு என் மக்கள் குறைந்தவர்களல்ல. உண்மையில் இதனுல் அவர்கள் நன்மையையே அடைந்தனர். இதற்கு முன் அவர்களுக்குத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்கிற உணர்ச்சியிருந்திருப்பின் இப்பொழுது அதைமுற்றும் மறந்துவிட்டது மன்னியில் எல்லாக்குணமுள்ள பிள்ளைகளுடனும் தாராளமாகக் கூடி விளையாடக்கற்றுக் கொண்டனர். இது அவர்களைப் பரீட்சித்து நல்லவழிக்குக் கொண்டு வந்ததுபோலாயிற்று.

நல்ல பிள்ளைகளையும் கெட்ட பிள்ளைகளையும் ஒன்று சேர்ந்துப் பழக்கி வந்தால் அதனுல் நல்லபிள்ளைகள் கெட்டுப் போகமாட்டார்கள் என்கிற விஷயத்தை இதனுலும் இதைப்போலொத்த மற்றைய பரிசீலனைகளாலும் நான் உணர்ந்தேன். ஆனல் மக்களின் பெற்றோர்களோ போஷகர்களோ இவ்வித பரிசீலனையை மிகச் சாக்கிரதையாகக் கையாள வேண்டும்.

இதனுல் மக்களை நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக வளர்ப்பினும் அம்மக்கள் தீய விருப்பத்திற்கு ஆளாக மாட்டார்களென்று சொல்வதற்கில்லை. ஆயினும் பெண்களும் பிள்ளைகளும் ஒன்று சேர்த்து வளர்க்கப்பட்டோ அல்லது கற்பிக்கப்பட்டோ வந்தால் அப்பொழுதுதான் உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் மிகச் சிக்கலான பரீட்சைக்கு உட்படுகிறார்கள் என்பது நிச்சயம். அவர்கள் எப்பொழுதும் தம் மக்கள் மேல் கண்ணுங் கருத்துமாகவே இருக்கவேண்டுவ தவசியம்.

## நூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவில் கல்வி

"கல்வி அபிவிருத்தி" என்னும் ஆங்கில சஞ்சிகை 1835-ம் வருஷத்தில் ஆடம் என்பார் எழுதிய அறிக்கையிலிருந்து பின்வரும் பகுதியை எடுத்துக் காட்டுகிறது:—

கல்விக் கமிட்டியைச் சேர்ந்த ஒரு பிரபல அங்கத்தவர், தற்போது வீழை மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு கிராம பள்ளிக் கூடத்துக்கும் மாதம் ஒரு ரூபாய் செலவிட்டாலும் மொத்த வருஷச் செலவு 12 லட்சரூபாய் ஆதமென்று கணக்கிட்டார். இதிலிருந்து வங்காளம், பீஹார் இரண்டு மாகாணங்களிலும் ஒரு லட்சம் கிராமபள்ளிக் கூடங்கள் இருப்பதாக ஏற்படுகிறது. இவ்விருமாகாணங்களின் ஜனத்தொகை 4 கோடி என்ருல் 400 பேருக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் ஆகிறது. அதாவது 32 சிறுவர்களுக்கு சாசரி ஒரு பள்ளிக்கூடம். இம்மாகாணங்களுடைய கிராமங்களின் தொகையைக் கவனித்தாலும் மேற்படி மதிப்பு சரியாயிருக்கலாம் என்று படுகிறது. 1,50,748 கிராமங்கள் இருக்கின்றபடியால் அவற்றுள் மிகப் பெரும்பாலானவற்றில் பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டும். இந்தியாவில் மிகவும் தாழ்ந்த வகுப்பார்களிடையேயும் தங்கள் பிள்ளைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்னும் ஆசை ஊறிக்கிடக்கிறது.

வேலை வாங்கும் எஜமானர் தாம் என்ன தவறுசெய்யினும் அதை உணருகிற தில்லை. வேலையாட்களின் குற்றங்களையே ஆராய்கிறர்! தான் உடைத்தால் பொன் கிண்ணி [illegible]

# கோபம்.

அவனியில் உற்பவித்த ஆன்மகோடிகளனைத்தினும் மனிதப்பிறவியே மேற்போந்ததொன்றென யாரே யறியமாட்டார்? இத்தகைய உயராசனம் பெற்றியங்கும் இவ்வர்க்கம் எஞ்ஞான்று தன் ஸ்தானம் தவறி கீழ் புக்குமெனில், இவ்வர்க்கத்திற்குரிய நெறிதிறம்பியவஞ் ஞான்றே யெனப் பகர்வாம். உரிய நெறி நல்வழியாமே யன்றி அல்வழியாவதில். நல்வழி புண்ணியும் நல்கும் என்றும் அல்வழி பாவம் பயக்குமெனவும் அறிய மாட்டுவோம். யாரேயாயினும் நல்லவழி செல்லவே தேவுகட்டளை. இக்கட்டளைவாறு நடைகொண்டவர் இறைவன் பக்கல் இருங்கை கொள்வ தரிதல்ல. இது கண்ட பெரியோர்கள் மக்கள் ஜென்ம சாபல்லிய மெய்த வேண்டி பல் வேறு நல்வழிகள் பகுத்துளார்கள். அவ்வழிகள் நடந்து ஆனடி கிட்டுவோமாக.

அல்வழிகள் பாவம் பயப்பதெனப் பகர்ந்தேம். சினம், செருக்கு, வெறுப்பு, எனனம், காமம்முதலியன பாவம் தரும் கெடுகுணங்கள். இக் குணங்களுடன் இயங்குங் காலத்திற்றான் பாவ கிருத்தியங்கள் விளைகின்றன. பாவிகளெனப் படுகின்றோம். பாதல நாகிடை வீழ்கின்றோம்—பட்டுப்பட்டழுந்துகிறோம். மேற்கழறிய தோஷங்களில் ஈடுபட்டுழலா வண்ணம் அறிவுகொள்ளுதல் அறிவாம். கொண்ட கருத்துக்கிணங்க அவற்றிலொன்றாகிய கோபம் குறித்து மட்டும் ஈண்டு பொறித்து ஏனயவை விடுப்பாம்.

கோபம் என்பது அமைதியின்மை என்ற பொருள் கொள்ளல் கூடும். எவ்விடம் அமைதியிலதோ அவ்விடம் சலனமிக்கும். இக்கோபச் சலனம் நம்மிதயத்தில் ரத்தத்தை கொதிப்புண்டாக்கி அதன் வேகத்தில் நம்மை யிழுத்துக்கொண்டோடுகிறது. இவ்வோட்டத்திற்காளாய்விட்ட மக்கள் எதிர்ப்பட்டனவற்றில் மோதுவதேயன்றி வேறு என்னவாம் என்று துவலல் தேவையின்று. இவ்வண்ணம் பொருதுகையிற்றான் பாவம் எனும் பாசம் பிணிக்கிறது. கோபத்தால் விளையும் கோரங்கள் குவியல் குவியலாகும். குவித்துவிட்ட கோரகாரியங்கள் ஒவ்வொன்றையும் அமைதியுடன் சீர்தூக்கிப் பார்த்தால் அது நம்மை எத்துணை மட்டும் பாவந்தரிக்கச் செய்து விட்டது எனப் புலப்படுத்தும்.

வாழ்க்கையில் தினேதினே பலருடைய சம்பந்தமும் உண்டு. பல்லார் சம்பந்த முடைத்து இயங்கும் மனிதர் எம்முறையில் நடைகொள்ளல் தகுதி யென்றுணரல் பெருமை. இவ்வுணர்வில்லாதாரே வாழ்க்கையில் பல இக் கட்டுகள் சூழலாகுவதுடன் மறுமையில் நரகிடை கஷ்ட வாழ்வு வழங்குகின்ற பாவத்திற்கும் ஆளாகிறார்கள். கோப நிகழ்ச்சிகள் பல செய்கைகளிலும் தோன்றுகின்றன. பேச்சிலும், வேலையிலும், விளையாட்டிலும், போதனையிலும், இன்னும் பல காரியாதிகளிலும் கோபம்கொழிப்பாகிறது. இருவரையெடுத்துக் கொள்வோம். இவர்கள்இருவருக்கும் விவாதம் நேர்கிறது. கேள்வி மேல் கேள்வி பறக்கிறது; விடை துணுக்குத் துணுக்காய் எடுத்தெறியப் படுகிறது. இந்நேரம் இவர்களில் ஒருவர் கோபியெனின் ஒப்பர்தகா முறை கையாளுவர். அது அவர் கோபம் செய்யும் கொடுமை. அடிக்கலாம்; அன்றி நாவல் மனமொடிக்கலாம். இல்லால் ஆம் பயன் என்? எதிர்த்தான் இறந்தான் எனின் இவன் பாறை மோதும் மட்கலமேயாவன். சமமெனின் சமர்பொருதலான் கொள்ளும் வருத்தம் வருத்தும். எளியானெனின் கோபம் சண்டாளமாய் உண்டாகி அன்னனை தகிர்த்தெறியக்கூடும். இங்குதான் கடவுள் கண்காணிப்புண்டு. ஒன்றும் செயவியலானெனக் கண்டு கனத்தற்கு பாவச்சூடு தெய்வம் போடுகிறது. பாவச்சூடு பயந்து செவ்வழிபுக்கும் மக்கள்தான் செம்மை சார்ந்தார். அன்றி முரட்டு சுபாவத்துடன் நெறி யோம்பாது மிருகத்தனம் காட்டுவரேல் தம் செயலுக்கு [illegible]

# தூத்துக்குடி

## தாலுகா போர்டு எலெக்ஷன்.

### ஸ்ரீ வைகுண்டம் திருச்செந்தூர் தாலுகாக்களின் நாடார் மஹாஜனங்களுக்கோர் விஞ்ஞாபனம்.

நாடார் குல சனவான்களே!

நாளது 1928-ஞு மார்ச்சு மீ ஸ்ரீ வைகுண்டம் தூத்துக்குடி தாலுகா போர்டு எலெக்ஷன் நடைபெறும். எலெக்ஷன் மூலமாய் 18 மெம்பர்களும் நாமினேஷனில் 6 மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

நமது குலத்தலுர்கள் ஏராளமாக விருக்கும் இவ்விருதாலுகாக்களிலும் நம் குலப் பிரதிநிதிகளையே தேர்ந்தெடுத்து அனுப்ப நமக்கு நல்ல சமயம் ஏற்பட்டிருக்கின்றது. கிடைத்திருக்கும் இந்த நல்ல சமயத்தை அசட்டை செய்யாதிருப்போமாக. தூங்குகிற நீங்கள் விழித் தெழும்புங்கள். இதர வருணத்தவரின் நய வஞ்சக வார்த்தைகளுக்கு செவி கொடாதீர்கள். வாக்கு வாதங்களினித்தமும் கட்சிப்பிரிவினைகளினிமித்தமும் ஜாதி அபிமானத்தை மறந்து விடாதேயுங்கள். ஓட்டுச் சுதந்திரங்களை வீணே இழந்து விடாதீர்கள். நம்மில் தகுதியான அபேக்ஷகர்களிருக்கையில் அந்நிய ஜாதியினர்க்கு நமது ஓட்டுக்களைக் கொடுப்பது நம் மானத்தையே விற்றுவிடுவதுபோல் எண்ணுங்கள். குலாபிமானம் உங்களைப் பெரிதும் வருத்துவதாக. ஏக சம்மதமாயும் மனப்பூர்வமாயும் ஒத்து உழையுங்கள். குலாபிமானிகளே! நம் குலத்தினர்க்கே ஓட்டுக்கொடுங்கள்.

நமது கிராமாந்தரங்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் வியாபாரம் கைத் தொழில் முறைகளிலும் ராஜ பக்தியிலும் சிறந்து விளங்க ஏற்ற முயற்சிகள் செய்யப்படவேண்டும். பிரிட்டிஷ் துரைத்தனத்தார் நமக்களித்திருக்கும் நன்மைகளை தாலுகாபோர்டு ஜில்லா போர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் எடுத்துக் கூறி நம் குலத்தினர்க்கு வேண்டிய சௌகரியங்கள் பாடசாலைகள் ரோடுகள் கிணறுகள் சாலைகள் சந்தைகள் முதலியன ஏற்படுத்துவதற்கென்று நம் குலப் பிரதிநிதிகளையே தேர்ந்தெடுத்து அனுப்புங்கள். நம்குல அபிமானிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் நாம் கோரிய காரியங்கள் கை கூடும். தாலுகாபோர்டு மெம்பர்களுள் பெரும்பான்மையோர் நம்மவராயிருந்தால் நமக்கு எவ்வளவு சௌகரியம் உண்டாகுமென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

இவ்விருதாலுகாக்களின் நாடார்கள் விவசாயம், வியாபாரம், உத்தியோகம் முதலியவற்றில் பெருத்த செல்வாக்குள்ளவர்களாயிருந்தும் கடந்த தாலுகாபோர்டு எலெக்ஷன்களில் மூதற்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

தங்குகிறது. வலியார்மாட்டு இவர் கோபம் என் செய்யப்போம்? அவர் முன்னிலையில் நயமுகந்தான். எளியவர்மட்டும் எதிர்த்துவிடக்கூடாது! என்ன இவர் வீரம்! இவர்கள் வலியார் மாட்டும் தம் இணையுற்றாரிடமும் அகந்தையால் சிக்குண்டு அவதியுறுவது பற்றி கடவுளுக்குக் கவலையில்லை. ஏன்? தம் அக்கிரமத்தினுல் அவதியுறுகிறாரென்பது. எனவே எவ்வகைத்தும் கோபம் என்பது கொண்டுவிடின் அது கொடுமைக்கு உடன்பட்டு பாவத்திற்கும், சாபத்திற்கும் அவதிக்கும் ஆளாகவேண்டிய திருக்கிறதாகையினமையின் நாம் அக்கோபத்தை யகற்றி அமைதி நிறுவி சுமுகவாழ்வு கொள்வோமாக.

ஓர் யதார்த்தவசனி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பொழுது போக்கு.

(பொய்யில்லான் பொழிந்தது.)

சுதந்திர நாடே சுகந் தரும் நாடாகும். சுதந்திர மூள்ள ஒரு ஜீவனின் பூரிப்பை சொல்வதரிது. இது தரும் வன்மை புள்ளினங்களிடம் காணலாம். இதை குஞ்ஞியோடும் புள்ளிமானும் கானிடை விலங்குப் பொதுவும் காட்டுகின்றன. இச் சீவராசிகளுக்கு அமையப் பெற்றிருக்கும் சுதந்திரம் மானிட வர்க்கத்திற்கு ஸ்த்துவே இன்றியமையாததென்று நாம் அறிவு கொள்ளல் வேண்டும். ஒரு காரியத்தில் ஒருவருக்குள்ள சுதந்திரம் இன்னொருவருக்கில்லை யென்றிருப்பின், இவன் ஏன் ஜென்மங் கொள்ள வேண்டும் என்ற பரிதாபத்திற்கும், சுதந்திரக் கட்டுடையார் பால் அதி கோபத்திற்கும் இடம் தரா நிற்கின்றது. இவ் வுலக நாடக சாலையில் அமைந்துள்ள பல தேச வரங்க மேடைகளிலும் சுதந்திர உடை தரித்து ஆடல் புரிந்து வரு மிந்த காலத்தில் நம் இந்தியாவில்—பாரத மாதா பொற் பீடத்தில் சுதந்திரப் போராட்டம் நடக்கிறது. சுதந்திரம் என்பதை இந்தியர்கள் இப்போது தானு கண்டார்கள்? இல்லை இல்லை. எப்போதும் இது அவர்கள் உள்ளுறப் பொதிந்து கிடந்த உணர்ச்சியாகும். ஆங்கிலர்கள் அடிமை கொண்ட நாள் முதலாய் தங்கள் சுதந்திரத்தை இழந்தார்கள். இழந்ததால் கதி யென்ன? இறகில்லாப் பருந்து போல் ஆனார்கள். பல்லாண்டுக் கணக்காக அவ்வப்போது தோன்றிய தலைவர்களால் சுதந்திர உணர்ச்சி யெழுப்பப்பட்டு வந்து, இப்போது இது குறித்த போராட்டம் உச்சஸ்தானத்திலிருந்து வருகிறது. உலகப் போக்கைப் பார்த்தால் இந்தியர் தனது சுதந்திர வீடாய் தீர்த்துக் கொள்ளு மென்றே தெரிகிறது. யாருக்கும்—எதற்கும் ஒரு விமோசன காலம் உண்டு என்பது உண்மையாகப் போகிறது. புராதன இந்தியாவின் பெருமை நடுவே சுதந்திர தேவியார் நர்த்தனம் புரியும் நாளை யெதிர் பார்ப்போமாக.

ஃ ஃ ஃ

மாமிசம் புசியா திருப்பது இகபர மிரண்டிற்கும் சாதகமாயுள்ளது எனப் பல மேதாவிகள் மாமிசத்தை யொழித்து வரப் பாடுபட்டு வருகிறார்கள். இதை மித மின்றி யுபயோகித்து வந்த மேனாட்டாரும் விடுத்து வருகிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. மாமிச ஊண் நாவன்வில் ருசி போலிருந்து தேக வன்மையில் சிக்கை உற்பத்தி செய்வதோடு கொலைக்குப் பாத்திரமாகிய பாவத்திற்கும் ஆளாக்குகிறது. ஆடு கோழிகளும் நம்மைப்போல் தான் தாய் குழந்தை யென வளர்ந்து வருகின்றன. அவற்றில் ஒன்றை—ஆணிருக்கப் பெண்ணையோ—பெண்ணிருக்க ஆணையோ—தாயிருக்கப் பிள்ளையையோ—பிள்ளை யிருக்கத் தாயையோ நம் குடல் நிரப்பிக் கொள்ளக் கொஞ்சமும் அஞ்சாது லகுவில் அறுத்து சமைத்து உண்டு ஜீரணிக்கச் செய்து விடுகிறோம். பாவம்! ஏழைப் பிராணிகள். கேள்வி கேட்பாரிலை. இறைவன் ஒருவனே இக்குற்றத்திற்கு உருவிய கத்தியுடன் நிற்கிறான். மாமிசம் உண்கிறோம்: பாவமும், நோயும் பதிலாய்க் கொள்கிறோம். தின் றுழல்கிறவர்களுக்கு நிறுத்தக் கஷ்டமாய்த் தானிருக்கும். ஆனால் மாமிசம் தின்பதாலாய் கெடுதிகளை நன் காய்ந்து மனோ திடமாய் நிறுத்தினால் பின் அவ் வெண்ணமே வராது. எனவே எல்லோரும் மாமிசம் தின்பதை நிறுத்தி, சத் உணவை யுட்கொண்டு தேக திடங் கொண்டு பரிசுத்தர்களா யிருந்து அவனருட் கொண்டவர்களா யிருப்போமாக.

ஃ ஃ ஃ

காப்பி, டீ, புகையிலை, பீடி, சிகரெட்டு முதலிய லாகிரி வஸ்துக்கள் காட்டில் அமிதமாய்க் கையாளப்பட்டு வருகின்றன. சிறுவ ரென்றும், பெரியவ ரென்றும் கிடையாது—எல்லோரிடமும் சிகரெட்டும், பீடியும் தான். இந்த லாகிரி வஸ்துக்களை யுபயோகித்து மக்கள் மிகவும் நலிந்து விட்டார்கள். இப் பரிதாபத்தைக் கண்டு பெரியவர்கள் புத்தி சொல்லித் துடிக்கிறார்கள். இவர்க ளுரைக்குச் செவி மடுத்து இவ் வஸ்துக்களை உதறித் தள்ளி விடுவது தான் க்ஷேமங் கோரியதாகும். இன்றேல் நாளா வர்த்தியில் தேக நலனிழந்து ஆயுளையும் குறைத்துக் கொள்ள வேண்டியது தான். இவற்றாலாம் கெடுதிகளை பெரிய பெரிய டாக்டர்களெல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள். கண்டு தெளிந்து இக் கெட்ட வாடிக்கைகளைக் களைந்து விடுவார்களாக. மேனாட்டார் உபயோகிக்கிறார்களே யென்ற காரணம் கூற இட மிருக்கிறது. ஆனால் அவர்கள் நாட்டிற்கு அது அனுகூலமா யிருக்குமே யொழிய நம் நாட்டுக்கு அது விஷமாயே யிருக்கிற தெனும் முடிவு கொள்வார்களாக.

ஃ ஃ ஃ

பணமுடைத்தோர் கடவுள் தந்த பாக்கிய முடைத்தவராவார். பணப் பாக்கியம் பெற்றவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் சகலமும் சுகமே யனுபவித்து தம்மட்டுக்கும் சுகித்த மெய்து கொள்வதோடு, பரோபகாரமும் புரிந்து வருவரேல் ஆண்டவன் தந்த பாக்கியத்தை அல்வழியின்றி நல்வழியில் அனுபவித்த பேற்றுடன் இறை கிருபைக்காளாகிறார்கள். இவர்கள் தான் உத்தமர். சில பணக்காரர்கள் பிறருக்கு ஒரு தம்படி கூட கொடுக்க மனங் கொள்ளமாட்டார்கள். தம்மட்டுக்கு நன்றாய்ச் செலவு செய்து கொழுக்கச் செய்து கொள்வார்கள். யாரும் அவரிடம் தர்மமென்று சென்று பலன் பெற்றுவருவதரிது. இவர்கள் கடவுள் தந்த பாக்கியத்தை சுயநலத்திற் கேயனுபவித்து பிறர் முகம் நோக்காமல் இருந்து விடுகிறார்கள். இவர்கள் தர்மஞ் செய்யாதொழிவதற்கு தேவதண்டனை யடைனினும், தம் மட்டாயினும் திருப்தியாய்ச் செலவு செய்து பூரிக்கிறார்கள். இவர்களை மத்திபரென்கலாம். இவர்கள் தம் கருத்தை அறவழி செலுத்துவார்களாக. இன்னொரு சாரரிக்கின்றார். இவர்கள் கையில் பணம் கிடைத்தது நாய்க்குத் தெங்கங்கனிகிடைத்தது போல் தான். நாய்க்கு முழுத்தேங்காய் கிடைத்துவிட்டால், அத் தேங்காய் பேரிலுள்ள ஆவலால் உடைத்துத் தின்ன இயலாது உருட்டி உருட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும். தானும் தின்னாது; பிறர் தின்னவும் விட்டு விடாது. இது போல் ஒரு சில பணக்காரர்கள்—ஏன்? அனுபவிக்கா திருப்பதால் ஏழைகளே—பணத்தைத் திரட்டித் திரட்டிப் பத்திரமாய் வைத்து விடுகிறார்கள். வயிறாரச் சாப்பிடுவது கிடையாது; உயர்தரச் சாப்பாடு வைத்துக்கொள்வதில்லை. நல்லதோர் ஆடை யுடுத்திய தென்பது கிடையாது. சரீரத்தை சுத்தப்படுத்திக் கொள்வதென்பதில்லை. இன்னும் வாழ்க்கையில் எவையெல்லாம் முக்கிய அம்சங்களோ அவையெல்லாம் விடுபட்டே யிருக்கின்றன. இன்னவையவற்றை யெல்லாம் அநுபவிக்க வேண்டுமென்று ஆசை கிளம்பினும், பணக் குறைச்சலுண்டாகுமே யென்ற பேய்க் குணம் அவ்வாசையை அமிழ்த்தி விடும். இப்படி யப்போதைக் கப்போது தோன்றும் ஆசையடிபட்டுப் போய் கடைசியாய் அனுபவிக்கும் நினைப்பே யொழிந்து போய்விடுகிறது. உற்று நோக்கின் இவர்கள் யாருக்கோ அடிமைகளாயிருந்து தேடிவைக்கிறவர்களாயிருக்கிறார்களெனத் தெரிகிறது. இவர்களிடம் பணம் இருந்தென்? இல்லாதொழிந்தென்? பாடுபட்டுத்தேடி...என்ற நல்வழி பாட்டும் இவர்களுக்கென வெளியாயதாகும். இவர்கள் பணம் அனுபவிப்பதில் அதமராவார். இன்னோர்கள் ஞானம் உதயமாகி தம் யாக்கையழியும் முன் தாம் தேடிய—தமக்குக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு நன்கனுபவித்து பரோபகாரமும் செய்து ஜென்ம சாபல்ய மெய்து கொள்வார்களாக.

ஃ ஃ ஃ

"நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" என்பது பொன் மொழி. எத்துணை செல்வம் இருப்பினும் நோய் மட்டும் பற்றியிருப்பின் அச் செல்வமனைத்தும் படைத்திருந்தும் என்ன பயன்? நோய்க் கிடங் கொடாது வாழ்ந்து வருவதே இன்ப வாழ் வோடியைய்ந்ததாகும். நோய் நீக்கி வாழ்வதற்கு மருந்து நம் கையிற்றானிருக்கிறது. அது நம் தினசரி வாழ்க்கையில் நடை முறை தூயதா யிருக்கக் கவனித்துக் கொள்வதே. தினசரி நீராடி, சுத்த உணவை உட் கொண்டு, சுத்த ஆடைக ளணிந்து, தேகாப்பியாசம் செய்து கொண்டு வந்தால் நோய் என்பது அணுவும் அணுகாது. எவ்வித இன்பங்களிலும் நோயற்றவின்பமே தலையாயது. தேகாப்பியாசம் செய்து வருவதால்தேகம்வலுவுறுகிறது. வலுக் கொண்ட தேகத்துடன் சுகவாசியா யிருந்து பிரபஞ்ச இன்பங்களை வீடு கொண்டு வரப் பிரியப்படாதவர்களி யிருக்கக் காய் கின்பவராவர். பொதுவாக ஒரு தேசத்தின் தன்மை அதனுடப்பினராகிய மக்கள் நிலையைப் பொறுத்திருக்கிறது. தேக நலி வுற்றுத் தியங்கி நிற்கும் ஜனங்கள் தம் தேயத்தை இன்னொருவர் ஆக்ஷிக்கு விட்டு விட்டு அடிமைகளா யிருக்க வேண்டியது தான். நம் மிந்தியாவை எதிர் காலத்தில் சுயராஜ்யம் ஏற்று ஆண்டு வருவதற்கு நாம் ஒவ்வொருவரும் திட சரீரிகளா யிருக்க வேண்டுவ தவசியம். சரீரம் திடமாயின் மனோ திடமும் ஞான பலமும் உண்டாகும். எவ்வகையிலும் திடமுள்ள மக்கள் தான் ராஜ்யத்தை யேற்று நடத்த வல்லபராகுகிறார்கள். இதை யாம் நன்கு மதித்து ஒவ்வொருவரும் தேக நலனைக் கவனித்துவரப் பாடு கொள்வோமாக.

ஃ ஃ ஃ

ராயல் கமிஷன் பகிஷ்கார முழக்கம் நாடெங்கும் அதிர்ந்து வருகிறது. 3—2—28-ல் கமிஷன் பம்பாயில் இறங்கி விட்டது. பகிஷ்காரக் குறியாக பம்பாயிலும், பல பல விடங்களிலும் ஹர்த்தால் நடை பெற்றது. ஹர்த்தால் நிர்ணய முறைப்படி ஆங்காங்கு வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. கமிஷன் நாட்டில் காலடி வைத்த தினத்தே இவ்வளவு வெறுப்பு காட்டப்பட்டிருக்கிறது. பகிஷ்கார ஆர்வத்தைக் கண்டு கமிஷன் கலங்கித்தானிருக்கக் கூடும். எனினும் தமதுசாமர்த்தியத்தால் கமிஷனை நிலை நாட்ட வழி பண்ணிக் கொண்டு தானிருப்பார்கள். இந்தியர்களும் விழிப்புக் கொண்டவர்களாகி விட்டார்கள். என்ன தான் விளையு மென்பதைக் கவனிப்போம்.

## அருப்புக்கோட்டை.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

ஆறறிவுப்படைத்த மக்களாகிய நாம் ஆராய்ச்சிகொண்டு விலக்கற் கரியா வசியமான கொலைத் தொழில் வரும் பங்குனி மீ அதிகமாய் நிகழ்த்தப் பெறுவதினின்றும் இதமான வழியில் அதைத் தடைப்படுத்த—அஞ்ஞானத்தை யோட்டி ஞானமூட்ட—தீயநெறி விட்டு செந்நெறி தொட்டு காருண்ய-அன்பு-சாந்த வடிவாயுள்ள எந்த கடவுளுண்டோ அந்த சைதன்னியத்தை யடையச் செய்ய மக்களிடை நேரிய மொழி பல எடுத்தோதுவான் வேண்டி நீலகிரி பிரம்மஸ்ரீ ஞானனந்த சுவாமியவர்கள் இவ்வூர் ஜீவகாருண்யப் பிரசாரசபையின் ஆதரவில் அருப்புக்கோட்டை தம்மாந்தெரு புதுக் கடைத்தெரு முதலான விடங்களில் அன்பு, பக்தி, ஜீவகாருண்யம் எனும் பொருள் பற்றி வெகு சாங்கோப சாங்கமாய் கேட்போர் மனம் பிரேமை கொள்ளுமாறு பிரசங்கவாயிலான் விளக்கிவருகிறார்கள். சாஸ்திரம் அனுபோகம் மேற்கோள் வேதமுறை இவைகளின்படி பசுமரத்தாணிபோல் மக்கள் நெஞ்சிற் படும்படி அன்பே ஆருயிரென்றும், அன்பேயாம் தேடியலையும் சிவமென்றும் அத்தகைய அன்பைப் பெறாதார் எலும்பையும் தோலையும் தாங்கிய கட்டையாகக் கருதப்படுவாரேயன்றி மனிதனுய—ஆறறிவுப்படைத்த ஜீவனுய் கருதப்படாரென்றும் நீதி புகட்டிய செம்மொழிகளைச் செவியுற்ற—அநுவரை புலால் புசித்துவந்த ஆடவர் பலர் இனி புலால் அருந்துவதில்லையென்றும் கொலைபுரிவதில்லை யென்றும் உறுதி கூறி பிரசங்க மேடைக்கு ஆர்வமொடு வந்து தங்களின் தீக்ஷண்ணியத்தைக் காட்டியதோடு ஜீவகாருண்யப் பிரசார சபைக்கு அங்கத்தினர்களாகவும் சேர்ந்திருக்கிறார்கள். மாணவர் பலர் இவ்வன்பு வழியில் தங்கள் வாழ்க்கையைத் திருப்பி யிருப்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

## நீதி மொழிகள்.

கடவுளுக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

* *

நன்மை செய்யும்படி உனக்கு திராணி இருக்கும் போது அதைச் செய்யத் தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே.

* *

அச்ச மின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாய்த் தீங்கு நினையாதே. ஒருவன் உனக்கு தீங்கு செய்யாதிருக்கக் காரணமின்றி அவனோடே வழக்காடாதே.

* *

தானியத்தைக் கட்டி வைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின் மேல் ஆசீர் வாதம் தங்கும்.

* *

அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும் நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்.

* *

பலி யிடுவதைப் பார்க்கிலும் நீதியும், பரிசுத்தமும் கொள்வதே கடவுளுக்குப் பிரியம்.

* *

விபசாரப் பிரியன் தரித்திரனாவான்: மதுபானத்தை விரும்புகிறவன் ஐசுவரியனாவதில்லை.

* *

ஏழையா யிருக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே. சிறுமையானவனை நியாய ஸ்தலத்திலே உபத்திரவப் படுத்தாதே. கடவுள் அவர்களுக்காக வழக்காடி அவர்களை கொள்ளை யிடுகிறவர்களுடைய பிராணனைக் கொள்ளை யிடுவார்.

* *

கோபக்காரனுக்குத் தோழனாகாதே. உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே. அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக் கொண்டு உன் ஆத்துமாவுக்கு கண்ணியை வருவிப்பாய்.

ச. ஆசீர்வாத நாடார்.

## ஆகாயத்தில் ஜோதி எழுத்துக்கள்.

"பம்பாய் கிரானிகள்" பத்திரிகையிலிருந்து பின்வரும் விபரம் திரட்டப்பட்டது:—

இரவு நேரத்தில் ஆகாயமெல்லாம் ஜோதி எழுத்துக்களால் ஜொலிக்கும் காலம் வெகு தூரத்திலில்லை என்று சொல்லப்படுகிறது. ஐரோப்பாவின் முக்கிய நகரங்களுக்கு மேலே இரவில் ஜோதி எழுத்துக்களால் செய்திகள் தெரிவிக்கப் பிரமாண்டமான ஆகாயக்கப்பல்கள் தயாராகின்றனவாம். இத்தகைய ஆகாயக் கப்பல் ஒன்று கட்டி முடிக்கப்படும் தறுவாயில் இருக்கிறது. அதனுடைய விஸ்தாரமான சிறகுகளின் கீழே சில இயந்திர சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இயந்திரங்களைச் சரியான்படி இயக்கினால் பிரமாண்டமான ஜோதி எழுத்துக்கள் பளிச்சுப் பளிச்சென்று தோன்றி மறையும்படி செய்யலாம். ஆகாயத்தில் இக்கப்பல் அதிவேகமாகப் பறந்து சென்று கொண்டிருக்கும் போது இத்தகையஜோதி எழுத்துக்களால் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டே போகுமாம். நகரங்களில் ஆங்காங்கு ஜனங்கள் கூடி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து மேற்படி செய்திகளைப் படித்தறிவார்களாம். இவ்வாறே பல்வகை வர்ண ஒளி எழுத்துக்களும் வானத்தில் தோன்றச் செய்யலாமாம். தற்கால நகரங்களில் கடைத்தெருக்களும், பெரிய மாளிகைகளும் இரவு நேரத்தில் ஜொலிப்பதுபோலவே ஆகாயமும் ஜோதி மயமாய்ப் பிரகாசிக்கும் காலம் விரைவிலேயே வரும் என்று தெரிகிறது.

சிலர் தம் பெரிய அந்தஸ்தை எதிலும் உபயோகித்து சுய லாப திருஷ்டியில் நிற்கிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்துரு வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---


# நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு தை மீ உ௰௪ உ


## பகிஷ்காரப் போக்கு.

இந்தியச் சீர்திருத்தத்தைப் பரிசிலனை பண்ணவரும் ராயல் கமிஷனை இந்தியா ஏகோபித்துப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றே கமிஷனர்கள் நியமான வுடன் சர்வ ஜனங்களுடைய அபிப்பிராயங்களும் ஒன்று போல் காணப்பட்டது. அதற்கொரு எதிர்ப்பு இருக்கிறதென்பதே தெரியவில்லை. நாமும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தான் எழுதியுமிருக்கிறோம். ஆனால் சென்னைக் காங்கிரஸ்—மயிலை ஐயங்கார்கள் காங்கிரஸ் போலாகி சத்துள்ள தீர்மானங்களை யெல்லாம் புறக்கணித்து விட்டு உயிரற்ற தீர்மானங்களை ஒப்புக்குச் செய்து மண் கூட்டி விளையாடும் சிறுவர் கூட்டம் போலவும் வாய் வேதாந்தம் படித்து ஏமாற்றுபவர்கள் கூட்டம் போலவும் காங்கிரஸ் தோற்றம் காண்கிறது என்று மகாத்மா காந்தி உபசாரணைக் கமிட்டியாருக்குச் சூடு கொடுத்த பிறகு வேறு விதமாக மாறி விட்டது. காங்கிரஸில் பகிஷ்காரத் தீர்மானம் வந்த போது சட்ட சபைகளையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று வந்த திருத்தங்களை யெல்லாம் புறக் கணித்த போதே சென்னைக் காங்கிரஸ் ஏமாற்றுந் திருவிழா வென்றும், எல்லாம் ஐயங்கார் சூட்சி யென்றும் கண்டு கொண்டு பகிஷ்காரத்துக்கு எதிர்ப்பும் ஆரம்பித்து விட்டது. காங்கிரஸ் தீர்மானங்கள் ஆண்டகைமையுடைத்தா யிருந்திருக்குமானல் பகிஷ்காரத்திற்கு எதிர்ப்பே ஏற்பட்டிருக்க மாட்டாது. ஏன்? இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானத்தின் சாராம்சம், பிள்ளையார் செய்ய குரங்காய்ச் சமைந்தது போல் அவ் வேற்றுமை யில்லாத சென்னை மாகாணத்திலும் வேற்றுமைக்குப் பயிரிட்டது போல் சேலத்திலும், சென்னை—சூளையிலும் நடந்து விட்டது. நளபாக போஜனத்தில் நரகலையும் வைத்தது போல் பல மகாநாடு கூடு மிடத்தில் முட்டாள்த் தன [illegible] காட்டுக்கும் இடம் கொடுத்தாதரித்ததும் ஒரு காரணமாகும். இவ்வாறு பல மூகாந்திரங்களைக் கொண்டு பகிஷ்கார எதிர்ப்பு வலுப்பட்டே வந்தது. இதைக் கண்ட காங்கிரஸ் வாதிகள் தங்கள் மூக் கறுபட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டி அவர்களாலான மட்டும் செய்து வழக்கம்போல் செய்கிற சூட்சிகளையும், பொய்யான பேச்சுகளையும் பரப்பினர்கள். குண்டர்களும், கோளர்களும் தொண்டராகி, கண்ட விடங்கள் தோறும் அண்டப் புளுகுகளை யெல்லாம் அடுக்கடுக்காய்த் தொடுத்து விட்டார்கள். இவர்கள் பிரசாரத்தின் வலிமையும், எதிர்ப் பிரசாரத்தின் வலிமையும் எவ்வாறுள தென்று சோதிக்க எண்ணி ஏற்கனவே திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கூடிய கூட்டத்தில் மண் மாரியும், கல் மாரியும், செருப் பெறியும், பாணு வீச்சும், கத்திக் குத்தும் நடந்து திரு. சத்தியமூர்த்தியும், டாக்டர். வரதாராஜுலுவும் தலை தப்பியது தம்பிரான் செயலாய் விட்டதென்று சொல்லப்படுகிறது.

ஒரு காலத்தில் தென்னாட்டுத் திலகரெனச் செப்பக் கேட்ட டாக்டர். நாயுடுவும், சத்தியமூர்த்தி பேசுகிறார் என்றால் அஷ்ட திசை ஜனங்களும் ஆவென்று வாய் திறந்து அசையாதிருந்து கேட்டானந்திப்பர் என்ற பேர் வாங்கிய வாய் வல்லவர் திரு. சத்திய மூர்த்தியும், மகமதிய திலகமாயும், தேசாபிமானியாயும் விளங்கும் கனம் யாகுப்ஹாசனும் ஆகிய இம் மும் மூர்த்திகளுங் கூடிய கூட்டமே நாதியற்ற தன்மைக்கு வந்து விட்டதென்றால் எதிர்ப் பிரசாரம் எவ்வளவு வலுவுள்ளதா யிருந்திருக்கக் கூடுமென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இனி பகிஷ்காரம் எவ்வளவுக்கு வெற்றி பெற நடந்திருக்கிறதென்பதைச் சிறிது கவனிப்போம். பிப்ரவரி மீ 3 உ வெள்ளிக்கிழமை பம்பாய்த் துறைமுகத்தில் சைமன் கமிஷன் வந்திறங்கும்போது பம்பாயிலும், புனவிலும் பகிஷ்காரம் அமைதியாகவும், வெற்றி கரமாகவும், ஒழுங்காகவும் நடை பெற்றிருக்கிறது. என்றாலும், பம்பாயில் மகம்மதியர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் கமிஷனுக்கு ஆசி கூறி வரவேற்றிருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் கமிஷனுக்கு வழக்கம்போல் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து பந்தோபஸ்துடன் டில்லிக்கு வழி யனுப்பி விட்டார்கள்.

மற்றெவ் விடங்களிலும் பகிஷ்காரமும், அதற்கு எதிர்ப் பிரசாரமும் ஒன்றை ஒன்று மேற் போக விடக் கூடாதென்று முழுப் பலத்துடன் நடை பெற்றிருப்பதாகவே தெரிய வருகிறது. கலகமும், கொள்ளையும் பல விடங்களில் நடந்திருக்கின்றன. பொதுவாகக் கலகம் நடக்காத ஹர்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். கல்கத்தாவில் பெரிய கலகம் நடந்து நூறு பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் கைது செய்யப்படலா மென்று தோன்றுகிறது. இளவரசு பகிஷ்காரத்தைப் போல் எங்கும் கல் மாரி, மண் மாரி, சாணி மாரிக்குக் குறைவில்லை. நரகலுங் கூட [illegible] சென்னையில் முற் பகலில் ஐயங்கார் ராஜ்யமா யிருந்து பல விடங்களில் கலகமும், கடை யடையாதவர்களை பலாத்காரமாய்க் கொள்ளையடிப்பதும், கண் மூக்குத் தெரியாமல் போலீஸ் நிலையங்களையும், நீதி ஸ்தலங்களையும் தாக்குவதுமாயிருந்து போலீஸார் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் இறந்து, பலர் காயப் பட்டும் போனார்கள். பலர் கைது செய்யப்பட்டு மிருக்கிறார்கள். பிற் பகலில் வேலை நிறுத்தம் செய்த சாதாரண ஜனங்களுக்குள் விழிப்பேற்பட்டு இதெல்லாம் பிராமணச் சூட்சியும், படித்தவனும், பணக்காரனும் கவர்ன்மெண்டில் இன்னும் தாங்களே உயர் பதவி பெறுவதற்கு நம்மை யெல்லாம் உபகருவிகளாக உபயோகப்படுத்துகிறார்களென்பதையும் நன்குணர்ந்து பகிஷ்காரமும், ஊர்வலங்களும் நடை பெற வொட்டாமற் றடுத்து தடிகளைச் சுழற்றிக் கொடிகளைப் பிடுங்கி முடிகள் சிதற அடி அடி யென்றடித்து அலங்கோலமாய் ஓடி ஒளியும்படி செய்து விட்டு போலீஸ் பாதுகாப்புடன் நடத்திய கடற்கரைக் கூட்டத்தையும், கால் மணி நேரத்திற்கு மேல் நடக்க வொட்டாமற் றடுத்து தலைவர்களை யெல்லாம் கல்லா லெறிந்து, காரி யுமிழ்ந்து, டாக்டர். நாயுடுவை மறித்து கல்லா லடித்து, டிரைவருடன் காயப்படுத்தி விட்டிருக்கிறார்கள். சென்னை நகர மெங்கும் பெருத்த அமளி ஏற்பட்டு எந்த நேரத்தில் என்ன நடக்குமோ வென்று மக்கள் நடுக்கத்துடனிருந் திருக்கிறார்கள். எந்த இடத்திலாவது பிரிட்டிஷாருக்கு அச்சத்தையும், அறிவையும் உண்டு பண்ணுமாறு பகிஷ்காரம் நடை பெற்றிருப்பதாகத் தெரிய வில்லை. இதனால் இங்கிலீஷ்காரர் இறுமாப்புத் தணிந்து விடு மென்று எண்ணுவது பைத்தியகாரத்தனமாகும். காங்கிரஸ் காரர்களும் ஜனங்களுடைய மனப்போக்கைத் தேசப் புனருத்தாரண வழியிற் புக விடாமல் தப்பான வழியில் அடிக்கடி திருப்பிக் கொண்டிருந்தால் அராசகம் தோன்றி அவமானத்தையே விளைவிக்கக் கூடும். பழியும், பாவமும் காங்கிரஸ்காரர் தலையிலே வந்து முடியும். இப்போது நடை பெற்ற கலகம், கொள்ளை, கொலை, சமாதானக்குறை முதலியவைகளுக்குக் காரணமானவர்கள் காங்கிரஸ்க்காரரா கவர்ன்மெண்டாரா வென்று கேட்கின்றோம். பகிஷ்காரம் அமைதியுடன் நடைபெறுவதற்குமுன் சாக்கிரதையுடன் காங்கிரஸ்காரர்ஏன் வேலை செய்திருக்கக்கூடாது. கலகம் நடை பெறு வண்ணம் கவர்ன்மெண்டார் ஏன் முற் கூட்டி வேலை செய்திருக்கக் கூடாது? இவ் விரண்டுக்கு மிடையில் ஏழை மக்களா சாக வேண்டும்? தேச சமாதானக் குறைவுக்குக் காரணமாயிருந்தா ரென்று மகாத்மா காந்தியையே அரஸ்ட் செய்த கவர்ன்மெண்டுக்கு இப்போது கண்ணில்லையா? இக் கலகத்திற்கு ஆதி காரணமா யிருப்பவர்கள் யா ரென்பதை அறிய முடியவில்லையா? பிரிட்டிஷ் ஆட்சியும், பிராமண ஆட்சியும் ஒன்று பட்டு விட்டதா? கொள்ளையும், கொலையும் கொடுத்த மக்களுக்கு யாரேனும் வழி சொல்லித் தான் ஆக வேண்டும்? கடை யடைக்கும்படி காலிகளை ஏவி விட்டவர்கள் காங்கிரஸ் காரர்கள். கலகம் நடப்பதைத் தடுக்க உதவி தேடியும் சமயத்துக்கு உதவாமற் [illegible] கவர்ன்மெண்டார். ஆகையால் தக்க விசாரணை செய்து நஷ்ட மடைந்த ஜனங்களுக்குப் பரிகார மளிக்க கவர்ன்மெண்டார் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்தில் முக்கியமான சில ஜில்லாக்களிற்றான் பகிஷ்காரம் நடைபெற்றிருக்கிறது. ஆயினும் எதிர்ப்பும் கலகமும் இல்லாமல் ஓரிடத்திலும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. சென்னை நகரத்துக்கு இரண்டாவதாகச் சொல்லப்படும் மதுரையில் எதிர்ப்பு இருந்தபோதிலும் காங்கிரஸ்க் காரர்கள் புத்திசாலித் தனத்தாலும் பொறுமையாலும் பூரண வெற்றியுடன் நடைபெற்றிருக்கிறதாக அறிகிறோமென்றாலும் அங்கும் கலவரம் நடக்காமலில்லை யென்று தான் சொல்லப்படுகிறது. இப் பகிஷ்காரத்தில் ஏற்பட்ட இப் பெரிய குழப்பத்தால் கவர்ன்மெண்டும் திடுக்கிட்டுத்தானிருக்கும்; கமிஷனும் கலக்க முற்றிருக்கத்தான் வேண்டும்; காங்கிரஸ் காரர்கள் மனம் படும் பாட்டிற்கும் அள விராது. கல்லெறியும் கடைக் கொள்ளையும் கொள்ளப் பட்டாருள்ளம் கொதிப்படைந்து கொண்டிருக்கக்கூடும். பிரிட்டிஷ் ராஜ்யம் பெரிது; அது மிகப் பலமுள்ளது; மேலும் அது என்றும் சிரஞ்சீவியாகவுமுளது; அதன் பலமான பீடி நம்முடிமேலுளது; ஆகவே நமக்கு சாதாரண ஜனங்கள் தயவு தேவை இல்லை; நாமே ராஜா நமக்கெல்லோரும் கீழ்ப்படிய வேண்டும்; இலதேல் பிரிட்டிஷ் சக்ரத்தைக் சுழற்றி விட்டுவிடச் செய்வோம் என்று மனப் பால் குடித்துக் கொண்டிருந்த பணக்காரர்கள்பலர்தாம்பட்டபாட்டினால் இன்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இங்கு இறந்ததோ வென்றும் எண்ணி ஏங்கி யிருக்கவுங்கூடும். ஊருடன் கூடிவாழ்; நாடொப்பன செய் என்ற மூதாட்டி கூறிய முது மொழிகளின் அனுபவ வாயிலாய் ஒருவாறு அறிவுச் சுடருண்டாகி மனமயக்கமொழிந்து மிருக்கலாம். எல்லாம் வல்ல இறைவன் காலச் சக்ரத்தை எவ்வாறெல்லாம் சுழற்றுவானே! யார்தான் அறியக் கூடும்? ஆயினும் பகிஷ்காரப் போக்கு இன்னும் என்னகிறது; பின்னும் என்னகப் போகிறது என்பதை வர வரக்கண்டறிந்து மறுமுறையும் அவசியமானல் எழுதுவோம்.

---

## பரத நாட்டின் நிலைமை.

(பிரம்ம ஸ்ரீ ஞானனந்த சுவாமிகள் எழுதியது.)

அறுசீர் செய்யுள்.

சீராரும் நாடாரின் குலமித்ரனெனுமிந்
தச் செல்வத்தானை
காராளும் நாட்டவர்கள் கைக்கொண்டு
ஓதிவரின் கவனமாகப்
பேராரும் புவியிலுளரைப் புனிதநாடைப்
பெறுவரெனப்பெரிதுங்கண்டு
நேராகும் பலமொழியை நிறையாகத்
தருவதென நிரப்புவோமே.

---

நாம் நமது பரதகண்டத்திலே அருளே பெற்று ஆர்வமே பெருக்கி இளமை முதலே ஈகையே புரிந்து உவப்புடன் நின்று ஊக்கமே கொண்டு என்றும் இறைவனை ஏற்றியே தொழுது ஐயமென்போரை ஒப்புடனேற்று ஓதிவந்தோரை ஔவியமற்றும் அஃதிஃதென்றும் அலையா நின்றோம்.

பண்டைகாலமுதல் அதுவோ இதுவோ எனும் சந்தேகம் நம்மிலில்லாமலேயே அருள்வடிவ ஜோதி சொரூ

ப்த்தை ஆனந்தமாகவனுபவித்து வந்தது நம் பர்தகண்டமே. மற்றக்கண்டங்கள் நான்கினும் சிறந்து தாயகமாக விளங்கி மருளை நீக்கி அருளைப்பெற ஆதாரவுகொடுத்துவா இக்கண்டத்திற்கு பிரத்தியேகச் செய்கை யதெனின்,

வான்முறைமழை பெய்யாது மானிலம்
வளமை குன்றுங்
கோன்முறைகோணும் மற்றுங்குடிவளங்
குறைந்து வாடுஞ்
சாண்வயிறதற்குங் கூட சரிவரக்கிடைக்
கானுனுங்
தான் எனுமகந்தை நீத்தத் தவசிகள்
குறைந்த நாட்டில்

என்பதற்கிணங்க குறைவற்று நிறைஒற்று உண்மையே நாடி உறுதியேகொண்ட முக்கால முணர்ந்த முனிவர்களும் மகரிஷிகளும் தபோதனர்களும் நம் நாட்டிலே கைலயங்கிரியின் அடியிலே பூரணத் தவஞ்செய்து நித்தியத்துவத்தினால் நாட்டைக்கண்டாசிகூறி நன்மையையே விளைவித்து வந்தார்கள். அது காரணத்தினால் நற்றபசிகள் நிறைந்த நம் நாடு நல்மழைபால் நனைந்து நஞ்சை செழித்து நாடாளு மன்னர் நல் நீதி செய்து நங்குடிமுற்றும் நல்வளம்பெற்று சந்தோஷமாக சரி வயிறு ஒப்பி சாந்தத்தென்றுஞ் சார்ந்தே நின்றது.

இம்மட்டோ! உலகம் தோன்றியது முதல் அதாவது உருக்வேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் எனும் நான்கு வேதங்களும் பிரக்ஞானம் பிரம்மம், அகம்பிரம்மாம்சி, தத்துவமசி, அயமான்மாபிரம்மம் எனும் சூத்திரங்கள் நான்கினையும் வெளியிட்ட காலமாகிய கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களும் கிரேதா யுகம்——பதினேழு லக்ஷத்து அறுபத்தெட்டாயிரமாண்டுகளும் திரேதாயுகம் பன்னிரெண்டு லக்ஷத்து தொண்ணூற்றாறாயிரம் ஆண்டுகளும் துவாபரயுகம் எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரமாண்டுகளும் கலியுகம் நான்கு லக்ஷத்து முப்பத்து இரண்டாயிரமாண்டுகளும் ஆக ஒரு சதுர்யுகம் நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதினாயிரமாண்டுகள் கடந்து இப்படி சதுர் யுகங்கள் இருபத்தாறுங் கடந்து இருபத்தேழாவது சதுர் யுகத்தில் கிரேதா, திரேதா, துவாபர யுகங்கள் போய் கலியுகத்தில் ஐயாயிரத் திருபத்தியெட்டு ஆண்டுகளுமாக இதுவரை பதினேழுகோடியே அறுபத்திரண்டு லக்ஷத்து பதின்மூன்றாயிரத்து இருபத்தியெட்டு ஆண்டுகளும் நம் நாட்டில் பெண்மக்களின் மகிமையுற்ற கற்பினும் ஆடவர்களின் பரிபூரண பக்தியினும் ஒளிர்ந்திலகி ஆடவரும் பெண்களும் அருள்பெற்றுவந்தனர்.

இப்பெரும் உலகினில் இலகிடும் இரு ஜாதி ஆணென்றும் பெண்ணென்றும் அமைந்ததுமட்டுமே. இந்நாளிற்பார்த்திடில் இலகுதே ஜாதிகள் அநியாயமாகவே அணியணியாயிரம்! பிறப்பினிற் ஜாதியிற்பேதங்களில்லையே. மெய் மனுக்கிய பிறப்பினிற் பேதங்கள் பிரித்துமே சொல்லிடப் பெம்மனின் பெரியரோ? பேதையர் பேசிடும் பிரிவினையில்லையென ஜாதியில் அறிகுவீர் சாத்திரம் ஓதியே.

சாத்திர ஆராய்ச்சியும் வேதப்பயிற்சியும் இல்லாது ஒழிந்ததாற்றான் இக்காலத்து நம் மக்கள் உண்மை நடையிலிருந்து தவறித்தடமாடுகிறார்கள். அந்தோ! பரிதாபம்!! வேதங்களோதுதலும் சாத்திரங்களறிதலும் நீதிகளுணர்தலுங் கூடாதெனச் செய்யுங் குருடர்கள் சிலருளர். அவர்கள் யாரெனின் நீதிகளை மறைத்து ஜாதிகளைப் பிரித்து பல்ஜாதிகள் உண்டெனப் பரப்பிய காலத்து பார்ப்பனரெனப் பெயர் பெற்றிட்ட மக்களே.

இனியேனும் இதுகாற்போற்றூங்காமல் விழித்தெழுந்து ஆடவர் அம்மையர் எனுமிரு ஜாதியும் ஒவ்வொன்றும் இரண்டிரண்டாகப் பிரிவதைக்காணுங்கள். உத்தமத்தவறுவதால் உபரிகண்டு ஜாதி நான்காகத் தோன்றுகிறதிந்நாள். ஒப்பத்தகுந்ததே உயர்வையுந் தாழ்வையும். பக்தியிற் குறைந்தோர் புருடரிற் சிறு ஜாதி. கற்பினிற்குறைந்தோர்பெண்களிற் சிறு ஜாதி. இவ்வாறு பிரிந்திடா திருந்திடவேண்டியே இறைவனைக் கோரியே இறைஞ்சியே இருப்போம்.

(தொடரும்.)

## இருப்புப் பாதையில் புதிய கிளைகள்.

தென் இந்தியா இருப்புப்பாதையில் அடியிற்கண்ட தேதிகளில் கீழ்க்கண்ட லயன்கள் திறக்கப்படுமென்று தெரிய வருகிறது:—பிக்ஷாண்டார் கோயில்—லாலுகுடி 1-2-28; திண்டுக்கல் பொள்ளாச்சி லையன் 31-3-28; கூடலூர் விருத்தாசலம் லையன் 31-3-28; மதுரை, போடிநாயக்கனூர் லையன் 30-6-28; விருத்தாசலம்—லாலுகுடி மெயின் லையன் 31-12-28 திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குச் செல்லும் இருப்புப்பாதையில் பழனி பங்குனி உத்திரத்திற்காக வண்டிகள் விடக்கூடுமென்று தெரிகிறது. பழனியில் ஏப்பிரல் 3-ந்தேதி பங்குனி உத்தர உற்சவம் நடைபெறும். தற்சமயம் மணியாச்சி ஜங்ஷன் வழியாகச் சென்று வரும் 5 நெ. 6. நெ. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டிகள் பிப்ரவரி மாதம் முதல் தேதியிலிருந்து விருதுநகர் தென் காசி மெயின் லையன் வழியாகச் செல்லுமென்று தெரிகிறது. மதுரையிலிருந்து செங்கோட்டைக்கும் செங்கோட்டையிலிருந்து மதுரைக்கும் புதிதாக ஒவ்வொரு வண்டித் தொடர் விடப்படும். இவை மணியாச்சி வழியாகச் செல்லும். மதுரையிலும் செங்கோட்டையிலும் 5-6 நெ. வண்டிகள் வந்ததும் இவை புறப்படும் என்று தெரிகிறது.

## "மாரியப்பா வித்தியாசாலை", நடுவிற்பட்டி.

திருநெல்வேலி ஜில்லா எட்டையாபுரம் சமஸ்தானம் கஸ்பா நடுவிற்பட்டியில் லோக்கல் பண்டு ரோட்டிற்கு வடபுறத்தில் பொது ஜன நன்மைக்காக, ஸ்ரீமான் வே. கு. கு. மாரியப்பநாடாரவர்களால் ரூபாய் 10000—பதினாயிரம் வரை செலவு செய்யப்பட்டு ஓர் ஆரம்ப வித்தியாசாலை கட்டி முடிக்கப்பெற்று மாரியப்பா வித்தியாசாலையென்ற பெயரிடப்பட்டு எட்டையாபுரம்சமஸ்தானம் ஆதீனகர்த்தாவர்களாகிய மகாராஜ ராஜ பூஜிதமகா-ள-ள-ஸ்ரீ மகா கனமும் மேன்மையும் தங்கிய தங்க மகாராஜா அவர்களால் 1928—ளு ஜனவரி மீ 27 உக்கு தமிழ்பிரபவ வருஷம் தை மாசம் 14 உ வெள்ளிக்கிழமைகாலை 9½ மணிக்கு யானையெடுபிடி இடைக்கங்கள் ராஜவிருதுகளுடன் விஜயமாகி திறந்து வைக்கப்பெற்றது. கனம் ராஜா அவர்கள் திறந்து வைத்துஷை வித்தியாசாலை நீடூழி காலம் வாழ்ந்தோங்குபடியாக சந்ததி பரம்பரையாக வித்தியாசாலைக்கு மீ 1—க்கு ரூபாய் எழுபது வீதம் கொடுத்து வருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

பூ. தே. பஞ்சவர்ணநாடார்.

## ஸ்ரீமான் மா. வே. சண்முகவேல் நாடாரவர்களின்ஞாபகார்த்தவாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் இரண்டாவது ஆண்டு விழா 12—2—28 ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி, கதர்த் தொண்டர் திருவாளர் பொ. திருகூடசுந்தரம் பிள்ளை எம். ஏ. பீ. எல். அவர்களின் தலைமையில் காரைப்பேட்டையில் அமைத்திருக்கும் பந்தலில் நடைபெறும். அவ்வமயம் தேச பக்தர்களால் அரிய பல சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும். அனைவரும் விஜயம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். வெளியூர்களிலிருந்துவரும் கனவான்கள் இரண்டு நாளைக்கு முன்னதாகவே காரியதரிசிக்குத் தெரியப்படுத்தினால் போஜன வசதிகள் செய்து கொடுக்கப்பெறும் எனக் காரியதரிசி எழுதுகிறார்.

## ஓர் திருத்தம்.

16-1-28ல் வெளியீடான மித்திரனின் 6—ம் பக்கத்தில் "கிறிஸ்து நாதர் பிறந்தினக் கொண்டாட்டம், கொழும்பு" எனும் தலைப்புக்கொண்ட விஷயத்தின் 2-வது பாராவில் விலையுயர்ந்த பட்டுச் சால்வையும் என்றிருப்பதை பணமுடிப்பும் என்று திருத்தியும், அதையடுத்து "வி. மி. மிக்கேல் நாடாரவர்களால் அழகிய பட்டுச் சால்வையும்" என்று வருவித்தும், வி. மு. யேசு வடிய நாடார் என்பதை வி. மி. யேசுவடிய நாடார் என்று திருத்தியும் வாசித்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

## செய்தித்திரட்டு.

கமுதித் தாலுகா பெருநாளிக் கிராமத்தில் சமாதியாகி யிருக்கும் ஸ்ரீ கோவிந்த சுவாமி யோகிகளுக்கு நாளது தை மீ 30 உ வெகு சிறப்பாக மண்டலாபிஷேக ரதோற்சவம் நடைபெற பெருந்தகையான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. நாலா பக்கங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் இந்த வைபவத்திற்கு வந்து கூடுவார்களெனத் தெரிகிறது.

***

அவசரசட்டத்தின்கீழ் வங்காளத்தில் கைதிசெய்யப்பட்டு சமீபத்தில் விடுதலை பெற்ற ஸ்ரீ சுபாஷ்சந்திரபோஸ் அவர்களை ஸ்டேட்மேன் பத்திரிகை அவதூறாக எழுதி வெளியிட்ட குற்றத்திற்காக ரூ 1000 மும்செலவு தொகையும் நஷ்டஈடாக கனம் போஸுக்குக் கொடுக்குமாறு ஹைகோர்ட்டில் உத்தரவுசெய்யப்பட்டது.

***

இந்தியாவுக்கு அதிகப்படியான சுதந்திரம்வழங்கலாமாஎன்பதைப் பரிசீலனை செய்ய பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து புறப்பட்டிருக்கும் வெள்ளையரடங்கிய ராயல் கமிஷன் பகிஷ்கார விஷயமாய் சென்னையில் நடைபெற்று வரும் பிரசார கூட்டங்களில் அமளியே மேலாடி வருகிறது. மண்தூறலும் கல்லெறியும் கம்பு வீச்சும் அதன் பயனாய் அடிபட்ட மக்கள் துயரமும் கடற்கரையில் ஒப்பாரியிடுகிறது.

***

சென்னைபச்சையப்பன் கலாசாலையில் 29—12—27ல் நடந்த சென்னை மாகாண ஆதிதிராவிடர் மகாநாட்டில் ராயல் கமிஷனுக்கு நல்வரவு கூறி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

***

திருவண்ணமலையில் தங்கள் வீடுகளைத் தீக்கிரையாக்கிய ஆதிதிராவிடர்களுக்கு ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ரூ 1000 கஷ்ட நிவாரணார்த்தமாகக் கொடுத்திருக்கிறார்.

***

மாண்டலே—இரங்கூன் மெயில் ஒரு ஆற்றுப்பாலத்துக்கருகில் அவ்விடத்திய இரும்புச்சட்டிகள் திருட்டு நோக்கங்கொண்ட எவராலோ கழற்றப்பட்டிருந்ததால்இரு சாமான் வண்டிகளும்ஆளேற்றியஇருபெரிய வண்டிகளும்இஞ்ஜினும் ஆற்றில் விழுந்துவிட்டன. இரு டிரைவர்களும் பிரயாணிகளில் சுமார் நாற்பது பேர்களும் மாண்டனராம். கர்ணம் தப்பினால் மரணம் என்பதுபோலிருக்கிறது ரயில்வே பிரயாணம்.

***

வாஷிங்டனிலுள்ள கோடீஸ்வரப் பிரபுவான ஒரு அமெரிக்கருடைய பெண்ணான மிஸ் வி. பில். பேயர், ஒரு கடையில் குமஸ்தா வேலையிருந்த ஏழையான ஒரு அழகிய வாலிபனை காதல் மிகுதிகொண்டு கூட்டியோடிவிட்டனளாம். பணம் காதல் பெருக்கிற்கீடு தருமோ என்பது இங்கு சங்கையாயிருக்கிறது.

***

கனம் பணகால் ராஜாவிற்கு சென்னை வைர வியாபாரி முருகேச முதலியார் பெறுமானமில்லாத ரூ 18000 க்கு ஒரு நகையை கொடுத்து நம்பிக்கை மோசம் செய்துவிட்டதாக வியாபாரி மீது வழக்கெடுத்திருக்கிறாராம்.

***

ஸ்ரீரெங்கநாதருக்கு நஞ்சைகள் அதிகமாக வாங்கவெண்டுமென்ற நோக்கங்கொண்டு இரண்டாம் முறையாக லாட்டரி சீட்டொன்று இம்மாதம் முதல் ஆரம்பித்திருக்கிறார்களாம் அதற்கென ஏற்பட்ட கமிட்டியார். சீட்டு 1-க்கு ரூ 1 முதல் பிரைஸ் ரூ 2000. கடைசி பிரைஸ் ரூ 25.

***

மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு தொழில்வரி முனிஸிபாலிட்டியார் விதித்திருந்தனர். அதை தேவஸ்தான கமிட்டியார் ஆக்ஷேபித்து ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியம் நடந்ததில் வரி விதிக்கவேண்டியதில்லையெனத் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது.

***

சென்னைகார்ப்பொரேஷனுக்கு1926-27ம் வருஷத்தில் வரி வசூல் வரும்படி ரூ 5621000 .செலவு ரூ 5752000. அதிகச் செலவுக்கு ஜனங்கள் வகை சொல்ல வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

***

திருவனந்தபுரம் சட்டகலாசாலையில் ராஜீய விஷயமாய்ப் பேசும்படி பண்டித கே. சந்தானம்அவர்களை அழைத்ததற்காக ஷை சட்ட கலாசாலை பி, எல். மாணவரும், கலாசாலை சங்கக் காரியதரிசியுமான ஸ்ரீமான் கேசவன் போத்தியை கலாசாலைத்தலைவர் சஸ்பெண்டு செய்துளாராம். மாணவர் பரீக்ஷைக்கும் போகமுடியாதாம். மாணவர்க்கு ராஜீய விஷயம் எற்றுக்கென்பது தலைவர் வாதம் போலும்.

***

இரங்கூனில் 7 வருஷங் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்ற இரு கைதிகள் மற்றொரு விசாரணையின் பொருட்டு பியாபோன் என்னுமிடத்திற்கு கப்பலில் போலீஸாருடன் அனுப்பப்பட்டனர். இரவில் போலீஸ் புலிகள் அங்கிவிடவே கைதிகள் விலங்கைக் கழற்றிக்கொண்டு கைத்துப்பாக்கியொன்றுடன் கடலில் குதித்து நீந்திச்சென்றுவிட்டனர். இருவரில் ஒருவர் நீந்தமுடியாதிறந்தார். பிறிதொருவர் கரைசேர்ந்து தப்பியோடினர். போலீஸ் புலன் விசாரிக்கிறார்கள்.

***

காமா என்னும் ஒரு வடநாட்டு இந்தியர் குஸ்தியில் உலகத்திலேயே தமக்கு நிகரில்லையென அவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்து போட்டிக்கு வருபவர்களை தோற்கடித்துவருகிறார்.

***

கோயில்பட்டி தாலுகா உழக்குடியில் மறவஜாதியில் பிறந்த ஒருவர் சென்ற வாரத்தில் இரவு வேளையில் கடைவீதியில் கொல்லப்பட்டுக் கிடந்தாராம். காரணம் இவருக்கும் மற்றொருவருக்கும் ஒரே பெண்மீது ஏகமாய் ஏற்பட்ட விபசார செய்கையே யாகும் எனச் சொல்லிக்கொள்கிறார்கள்.

***

ஆமதாபாத் கூர்ஜா வித்தியாபீடத்தை பலவழிகளிலும் மகாத்மாஜீயவர்களின் மனப்படி திருத்தி யமைக்கும் பொருட்டு நிர்ணயமாக வித்தியாசாலையிலேயே மகாத்மா காந்தி வசிப்பதென முடிவுசெய்திருக்கிறாராம். பிரார்த்தனைக்குமட்டும் மாலையில் ஆச்சிரமத்திற்கு வருவாராம்.

***

இந்துக்களின் தொழுகைக்கு ஏற்ற விதமாக லண்டனில் ஆலயமொன்று நிர்மாணமாகி வேலை நடந்துவருகிறது. ஏப்ரல் மாதம் முடிவடையுமெனத் தெரிகிறது.

***

வழுக்கைத் தலையில் மிக மெல்லிய தங்கக் கம்பியை வைத்து மயிர் நட்டக்கூடுமாம். இவ்வாறு நட்டிய மயிர்கள் நரைக்கவும் வளரவும் செய்யாது. உண்மை மயிர்கள் போலிருக்குமாம்.

***

ஒரு விஷயத்தை 10 லக்ஷம் ஜனங்கள் தெளிவாய்க் கேட்கக் கூடுமாறு 1-மைல் விஸ்தீரணத்திற்கு ஓசை பரப்பும் கருவியொன்று நியுயார்க்கில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

***

தென்னாப்பிரிக்காவில் புதிதாக ஓர் சட்டம் சாராய சம்பந்தமாய் ஏற்பட்டிருப்பதில் அது அமுலுக்கு வருங்காலத்தில் சாராயத் தொழில் சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான இந்தியர்க்கு மட்டும் வேலை நீக்கம் கிடைக்குமாம். என்ன பரிதாபம்!

***

பர்மாவில் ஏவூ என்னும் ஊரில் ஆங்கில பாடசாலை உபாத்தினி ஸ்ரீமதி. மாவோட்டின் என்பவர் வீட்டில் ஓர் நாய் 7 குட்டிகள் போட்டது. அதில் ஒன்று உடனே இறந்து போயிற்று. இறந்த குட்டியைப் பார்க்கும் போது அதன் காது யானைக் காதைப் போன்றிருந்தது. அதன் முகத்தில் ஐந்தங்குலம் துதிக்கையுமிருந்தது. அதற்கு 1½ அங்குல நீளம் தந்தங்களுமிருந்தன. இக்குட்டியை அவ்வூர் ட்ரஷரி ஆபீசர் வீட்டில் வைத்திருக்கிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இந்தியாவில் பெண்மை இலட்சியங்கள்.

### ஸ்ரீமதி சரோஜனிதேவியின் பிரசங்கம்.

காலஞ்சென்ற ஸர் அசுடோஷ் மூக்கர்ஜி தமது புதல்வியின் ஞாபகார்த்தமாகக் கல்கத்தா சர்வகலாசாலையில் வருஷந்தோறும் கமலா உபந்நியாசங்கள் நடைபெறுவதற்கு ஒரு நிதி எழுதி வைத்திருப்பது நேயர்கள் அறிந்ததே. இவ்வாண்டு அவ்வுபந்நியாசங்கள் செய்யும்படி ஸ்ரீமதி சரோஜனி தேவி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவருடைய முதலாவது உபந்நியாசத்தின் சாராம்சம் வருமாறு:—

"சென்ற முறை இவ்வுபந்நியாசங்கள் செய்யும்படி என்னை நீங்கள் அழைத்தபோது நான் உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ளமுடியாமற் போயிற்று. ஆனால் இம்முறையும் உங்கள் அழைப்பை மறுக்க நான் துணியவில்லை. இக்காலத்தில் நட்பின்பெயராலும், பகைமையின் பெயராலும், இந்திய சாதியே தாக்கப்பட்டு வருகிறது. யார் நண்பர், யார் பகைவர் என்று தெரிந்துகொள்ள முடியாத இத்தருணத்தில், இந்தியாவின் பெண்மை இலட்சியங்களை அக்கினிச்சுடர் எழுத்தால் ஆகாயத்தில் எழுதிவிட வேண்டுவது அவசியமாகும்.

நான் எவ்வளவு தாழ்ந்தவள், தகுதியற்றவள் ஆனாலும், நான் இந்திய ஸ்திரீயாவேன்; ஹிந்துப் பெண்ணுவேன். கதைகளிலும், இதிகாசங்களிலும் பொதிந்து வைக்கப்பட்டுள்ள பண்டைக் காலப் பெண்மணிகளின் வழி வந்தவளாவேன். எங்களுடைய பரம்பரைச் செல்வமான இவ்விஷயங்களைப் பற்றி உங்கள் முன் இன்று பேச முன் வந்துள்ளேன்.

நான் யார்? நான் இந்தியக்கிராமங்களில் வசிக்கும் மாதர்களின் சின்னமாவேன்; நதியில் ஸ்நானம் செய்துவிட்டு இடுப்பில் தண்ணீர்க்குடத்துடன் வருபவள் நான்; பனைஓலை வேய்ந்த குடிசையில் அடுப்பு மூட்டுபவள் நான்; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்க் குழந்தைகட்கிய தொட்டிலை ஆட்டும் கையுடையவள் நான்; வயல்களிலே மனிதர்க்குத் துணையாக உழைத்து உழைத்து மாய்பவள் நான்; மரணத்தை வென்றுவிடும் மகத்தான பதிபக்திக்கு அடையாளமாய்க் கணவனுடன் சிதையில் எதி உயிர்நீத்தவள் நான்; சீதையும், சாவித்ரியும், தமயந்தியும் விடுத்துப்போன பக்தி, தைரியம், உறுதி, காதல், ஞானம், தியாகம் என்னும் அருஞ்செல்வங்களைப் பரம்பரை பாத்தியமாகப்பெற்றவர்களில் ஒருத்தி நான்; இந்தியாவில் தாழ்ந்ததொரு குடிசையில் மண்தரையில் உட்கார்ந்திருப்பவளும் சரியே, சலவைக்கல் அரண்மனையில் தந்தசிம்மாசனத்தில் வீற்றிருப்பவளும் சரியே, அந்தப் பாம்பரைச் செல்வத்துக்குச் சம உரிமைபெற்றவர்களாவார்கள்.

இந்நாளில், நம்மிடையே நண்பர்கள் என்ற வேஷந்தரித்துச் சில வீணர்கள் வருகிறார்கள். அவர்கள் இந்தியாவை உலகுக்கு அறிவிப்பதாகச் சொல்லுகிறார்கள். அதனால் தங்கள் கையைக் கறைப்படுத்திக்கொண்டுவரும் அம்மக்கள், இந்திய ஸ்திரீகளின் பசுவினது போன்ற பொறுமையைப் பகிரங்கப்படுத்தி உலகின் அநுதாபத்தை அவர்கள் பால் கவர்வதாகச் சொல்லுகிறார்கள். "ஏழைச் சகோதரிகளே! நீங்கள் வீட்டுக்குள்ளே பூட்டிவைக்கப்பட்டிருக்கிறீர்கள். முகமூடிகளுக்குள்ளே மூச்சுத் திணறுகிறீர்கள். கணவர்களின் சிதையில் உயிருடன் கொளுத்தப்படுகிறீர்கள். எல்லா வகையிலும் நசுக்கப்படுகிறீர்கள். ஆண்மக்களின் உடைமைகளாயிருக்கிறீர்கள். மனைவிகளாயினும், தாயார்களாயினும், சகோதரிகளாயினும் பஞ்சத்துக்குக் கஞ்சி ஊற்றுவதுபோலே உங்களுக்கு ஊற்றுகிறார்கள். ஓ! ஆண்மக்களின் அடிமைகளே! நாங்கள் உங்களுக்கு விடுதலை தருகிறோம்" என்று அவர் தேனொழுகப் பேசி கடைசியில் "ஆனால் எங்கள் நிபந்தனைகளை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று முடிக்கிறார்கள். நமது பலவீனத்தினால் லாபமடையுங் கருத்துடன்வரும் இத்தகையோருக்கு நாம் ஒரே ஒரு பதில்தான் அளிக்கமுடியும். அதாவது:— "நாங்கள் [illegible] தப்பட்டாலும், முகமூடிகளுக்குள் மூச்சுத் திணறச் செய்யப்பட்டாலும், மற்றும் எந்தக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாலும், விலங்குகளைப்போல், அடிமைகளைப்போல், உடமைகளைப்போல் நடத்தப்பட்டாலும், எங்கள் விடுதலை எங்கள் கையிலேயே இருக்கிறது. எங்களை மறைப்படுத்தும் சுவர்களை நாங்களே தகர்த்தெறிந்து வெளியே வருவோம். மூச்சுத் திணறச்செய்யும் எங்கள் முகமூடிகளை நாங்கள் கிழித்தெறிவோம். எங்கள் பெண்மை என்னும் அற்புதத்தினாலேயே இவ்வளவும் நாங்கள் செய்வோம். நண்பர்களாகட்டும், நண்பர் வேஷத்தில் பகைவர்களாகட்டும், வெளியாருடைய உதவி எங்களுக்கு வேண்டாம்". இத்தகைய பதிலே நாம் அளிக்கவேண்டும்.

கவிகளும் ரிஷிகளும் கற்பனை செய்த ஒவ்வொரு கதையிலும் அளவற்ற பலமுடையவளாய் விளங்கும் இந்தியப் பெண் இக்காலத்தில் "அபலை" யானது எவ்வாறு என்று நான் அறியேன். பெண்மையின் பல வீனத்தையல்ல; பெண்மையின் வலிமையை, சக்தியை அடிப்படையாகக் கொண்டே இந்திய நாகரீகம் என்னும் மாளிகை எழுப்பப்பட்டிருக்கிறது. தைரியம் ஒன்றே தெய்வீகத்துக்கு அடுத்தபடியான குணம் என்பது என் கருத்து. தைரியம், சிருஷ்டி சக்தியுள்ள ஒரு குணமாகும். அது மனிதனைக் கடவுளுக்கருகாமையில் கொண்டு சேர்க்கிறது. பெண்மையின் தீரமே நமது பண்டைக்காலப் பெரு இலட்சியங்களுக்கெல்லாம் அடிப்படையென்று நான் கருதுகிறேன். பெண்ணுக்குப் பெருமை தந்து போற்றிய அந்தப் பழைய இந்திய சாதியையும் பெண்ணை அபலையாக்கி வீட்டுக்குள் பூட்டி வைத்துப் பாதுகாக்கும் தற்கால இந்திய சாதியையும் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள். அந்நாளில் தெய்வ ஆராதனையிலும், யாக யக்ஞங்களிலும், கலியாணம் முதலிய கிரியைகளிலும் மனைவி புருஷனுடன் சமமான பொறுப்பு வகித்தாள். மனைவியும் கலந்துகொள்ளாவிடில் அந்த ஆராதனை முதலியவை பூரணமானவையென்று கருதப்படவில்லை. ஆணும் பெண்ணும் தோழமை பூண்டு, சமமான பொறுப்பு வகித்தாலன்றி வாழ்க்கை பரிபூரணமாவதில்லை யென்று அக்கால வழக்கங்கள் அறிவுறுத்தின".

சீதை, சாவித்திரி, தமயந்தி முதலிய பண்டைக்காலக் கற்பரசிகளின் இலட்சியங்களைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டுத் தேவியார் கூறியதாவது;— "இன்றையதினம் பாரத நாடு மரணவஸ்தையில் இருந்துகொண்டிருக்கிறது. பயங்கரமான யமன் இந்திய ஆண்மக்களின் ஆன்மாவைப் பற்றிக்கொண்டிருக்கிறான். தான் காதலித்த புருஷன் ஒரு வருஷத்திலே இறப்பது நிச்சயமென்று தெரிந்தும் அவனையேமணந்துகொண்ட சாவித்திரி தேவி இந்தப் பெரிய தேசத்தின் ஒவ்வொரு குடிசையிலும், வீட்டிலும் இப்போது தோன்ற வேண்டுமென நான் விரும்புகிறேன். தேசத்தின் கதி மோட்சத்திற்காக, நமக்குத் தற்போது இல்லாத தைரியத்தை மீண்டும் பெறுவதற்காக, சாவித்திரி இந்நாட்டில் ஜனன மெடுக்க வேண்டுமென விரும்புகிறேன்.

"ஸ்திரீகளுக்கு அரசியல் உரிமைகள் கொடுப்பதென்றால் ஏதோ புதிய சங்கதியாக நமக்குத் தோன்றுகிறது. பெண்கள் பொதுவாழ்க்கைக்கு வருவதென்றால் நாம் பயமடைகிறோம். தீயில் தைரியமாகக் குதித்த சீதையின் தூய்மையில் ஆரம்பமான இந்தியப் பெண்மையின் பெரு இலட்சியத்திற்கு நீங்கள் எல்லாரும் அவ்வளவு சாட்சிகளாயிருப்பீர்களாக. சாவித்திரி யமனிடம் என்ன கூறினளென்பதை நினைவுகூறுங்கள்:— 'நான் பெண்தான். ஆண்மகனுடைய வலிமையுள்ள கையினாலே ஒடித்துவிடக் கூடியவள் தான். வண்ணாத்திப் பூச்சின் சிறகிலும் மென்மையுடையவள் தான். ஆயினும் நான் இந்தியப் பெண். என்னுடைய உயிர் மரணத்திலேதான் அதிக வலிமை பெறுகிறது.' இவ்வாறு பேசிய சாவித்திரியின் வழிவந்த நீங்கள் அவளுடைய இலட்சியத்துக்குத் தகுந்தவர் [illegible]

## மதிப்புரைகள்.

### ஞானசூரியன்.

இப் புத்தகத்திற்கு ஏற்கனவே நாமொரு மதிப்புரை கொடுத்திருக்கிறோம். பல மதிப்புரைகளோடு பிரசுரிக்கப் பெற்ற புத்தகம் ஒன்றும் வரப்பெற்றோம். இப்புத்தகம் கானாடுகாத்தான் திருவாளர் வயிசு. ஷண்முகஞ் செட்டியாரவர்கள் வேண்டுகோட்படி சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களால் எழுதப்பெற்றது. இது ஆரிய வேதப்புரட்டுகளை வெளியாக்கும் பொருட்டும் பொதுவாக வேதம் ஆகமம் புராணம் மதம்முதலியவைகளிலுள்ள மூட நம்பிக்கையை அறவே ஒழித்து சன்மார்க்க நிலை உயரும் பொருட்டு எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ் மகள் யாவரும் வாங்கி வாசிக்கத் தக்கது. விலை ரூபாய் ஒன்றுதான். அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

வயிசு. ஷண்முகஞ்செட்டியார்,
கானாடுகாத்தான்,
இராமநாதபுரம் ஜில்லா.

ஃ ஃ ஃ

### சர்வவருண சமரச விளக்கம்.

மேற்கண்ட புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இது சர்வ தேசங்களிலுமுள்ள ஜாதிவரலாறுகளையும் ஜாதிபேதமுண்டான தன்மைகளையும் ஜாதிபேதங்களால் வருந் தீமைகளையும் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்று போதிக்கும் ஓர் சன்மார்க்க நூலேயாகும். இதை இயற்றிய திரு. இராஜ கோபால பாரதியாரவர்கள் சர்வ தேச ஜன விருத்தாந்தங்களை வெகு கவனமாய் ஆராய்ச்சி பண்ணியிருக்கிறாரென்றே நம்புகிறோம். இதை தமிழ்நாட்டாரனைவரும் வாங்கி வாசிக்க வேண்டியதவசியமே. ஆனால் பிரபஞ்சத்திலுள்ள மானிடரின் பொதுலட்சணங் கூறி விட்டு இந்து தேசமென்னும் பரதகண்டத்திலுள்ள ஆரியர் திராவிடர் பாகுபாடுகளை விளக்குமிடத்து ஆரியர் இத்தேசத்திற்கு வருவதன் முன் இத்தேச ஸ்திரீகள் புருஷனை இழந்த பின் கொழுந்தனுக்கு மனைவியாயிருந்து வாழ்ந்து வந்தனர் என்றும், ஆதிகுடிகளா யிருந்த கைக் கோளர் குறவர் இருளர் சான்றார் பறையர் முதலிய ஜாதியாருள் பெரும்பாலோர் நாளிது வரையும் ஆரியர் கட்டுப்பாடுக்கிணங்காமல் விதவைகளை மறு மணஞ் செய்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. இவ்விஷயம் சிறிதும் பொருத்தமாயில்லை. புருஷனிழந்த ஸ்திரீ கொழுந்தனைச் சேர்வது ஆரியர் வழக்கமாயிருக்க திராவிடர் வழக்கமெனக் கூறுவது பொருத்தமில்லை. தற்கால மங்கன்ம் எங்கேனுமிருந்தாலும் ஆரியர் சேர்க்கை வாசனையாலோ அவர்கள் போதனையாலே இடைக்காலத்திற்றான் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் சான்றாரில் எங்கும் அந்நாள் முதல் இந்நாள் வரையும் ஸ்திரீகள் மறு மணம் செய்து கொள்வதில்லை. சில விதவைகள் வருணப்புடவை கட்டிக் கொள்வதையும் கூட பழய காலத்தவர்கள் வெறுத்துத் தடுத்து நிறுத்தி விடுகின்றார்கள்.

சுமார் 1000 வருடங்களுக்கு முன்னுள்ள நம் நாட்டுக் கவியரசர்களில் ஒருவராகிய புகழேந்திப் புலவர் பாடிய நளவெண்பாவில்

குறையாத கற்பினுள் கொண்டானுக்
[கல்லாமல்
இறவாத வேந்தியானின்று—பறிநீறி
நெல்லிற் பருவாலோடு நெடுநாடா.
சொல்லப்படு மோவிச் சொல்

எனக் கூறியிருப்பதிலிருந்து நம் நாட்டிலேயே அந்நாள் அவ்வழக்கமில்லாதிருந்திருக்கத்தான் வேண்டும்.

கடைசியாக புலால் உண்ணலைப் பற்றி 16 பக்கங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் நாம் முற்றும் மாறுபடுகிறோம். ஆதியில் ஆரியரும் திராவிடரும் புலாலுண்டார்களென்பதற்கு சில ஆதாரங்களைக் குறிப்பிட்டு ஆகாரம் அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது; ஆகையால் ஒரு [illegible] மற்றொருவர் நிந்திக்கவும் பழிக்கவும் நியாயமே இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறது. அப்படியானால் மது வருந்துபவர், விபசாரம் செய்பவர் இஷ்டத்தை என் தடுக்க வேண்டும்? பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்கச் சட்டம் எதற்காக? நாவிணக்கமாய் நடந்து மனிதன் எப்போதும் மிருகப்பிராயமாகவே இருக்கவா வேண்டும்? "வீடு பெறநில்" என்று கூறிய மூதாட்டி வாக்குக்கு ஆடுகோழிகளைக் கொன்று தின்றால் அடுக்குமா? ஆன்ம லட்சணந்தான் ஆகுமா? தேக ஆரோக்கியத்திற்குத்தான் அடுக்குமா? புலால் தின்பதற்கு மேற்கோளாக ஆவரித்துத்தின்றுழலும் புலையரேனும் நான் வணங்கும் கடவுளாரே என்று ஒரு பெரியார் கூறியிருப்பதைக் கையாண்டிருப்பது ஒக்குமா? தின்று உழலும் எனக்கூறியிருக்கிறதே யன்றி தின்றுமகிழும் அல்லது சுகமுறும் அல்லது நலன் பெறுமென்று ஏற்றிக் கொடுத்திருக்கிறதா? மனிதன் நன்னிதிகளை யுணர்ந்து நல் மார்க்கத்தில் நடந்து தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரியிருந்து முடிவில் பரமபதமெய்த வேண்டியதுதான் கடமையா அல்லது பொய்யும் புளுகும் புனை சுருட்டுங் கொள்ள ஏதுகரமாகிய கள்ளும் சாராயங்களையும் குடித்து வெறித்து வாயிலாப் பிராணிகளைக் கொன்று அதை மென்று தின்று வயிறு வளர்ப்பதுவே கடமையா? உலகத்திலே சமாதானமாயிருந்து மக்கள் சுயமரியாதையுடன் வாழ்ந்து முடிவில் இறைவன் அடிசேர வேண்டுமானால் கொல்லாமை புலால் உண்ணாமை என்பதே நந்துணிபும் எல்லாமதங்களின் துணியுமாகும். ஆகவே சேகாருண்யத்துக்குமாறுபாடாயுள்ள சில விஷயங்கள் இந்நூலில் சேர்க்கப்படாதிருந்தால் பெரிதும் போற்றத்தக்கதாகும் விலை ரூ1. கிடைக்குமிடம்.

சி. பி. இராஜகோபால பாரதி,
24.சௌந்தரபாண்டியபிள்ளைதெரு
திருச்சிராப்பள்ளி.

ஃ ஃ ஃ

### "ஜஸ்டிஸ்" வருஷ அனுபந்தம்.

இவ் வருஷ அனுபந்தம் ஒன்று கிடைக்கப்பெற்றோம். பெரிய சயிஸில் நல்ல தாளில் அச்சிடப் பெற்றிருக்கிறது. அனுபந்தத்தின் முகப் பக்கத்தில் அலர்ந்த முகத்துடன் தண்ணீர் மொண்டு கொண்டு தன்னகத்துக்குப் போகும் ஓர் அழகிய இந்து மாதுவின் படம் இருக்கிறது. உள்ளுற அமைக்கப் பெற்றிருக்கும் படங்கள் கண்களைக் கவர்கின்றன. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ராதா தற் செயலாகச் சந்தித்தல், பரம சிவன் சடா பாரத்தினின்றும் கங்கை உற்பத்தியாதல், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கோவணத்துப் புல்லாங்குழல் வாசித்து நிற்றல், சந்தியை (பகலும் இரவும் சந்தித்தல்) ஆகியவையான வர்ணங்கள் தீட்டிய நேர்த்தியான படங்களும், வர்ணத்துடன் ஓர் அழகிய ராஜ புதன் மாதின் உருவப் படமும், ஐரோப்பாவிலுள்ள அரிய பெரிய கட்டடக் காக்ஷிப் படங்களும், கனம். பனகால் ராஜா அவர்களின் உதாரத் தோற்ற உருவப் படமும், நம் நாட்டு ஸ்திரீ தலைவர்களின் திருவுருவப் படங்களும் இணைக்கப் பெற்றிருக்கின்றன. சில முக்கிய கட்டுரைகளும், மற்ற விஷயங்களும் பொறிக்கப் பெற்றிருக்கின்றன.

ஃ ஃ ஃ

### "அருணகிரி"

இப் பெயர் கொண்ட வாரப் பத்திரிகையின் 2-வது வருட முதற் சஞ்சிகையொன்று கிடைக்கப் பெற்றோம். இது இராமநாதபுரம் ஜில்லா பன்னத்தூரினின்றும் ஸ்ரீமான் சி. ராம. ராமநாதன் அவர்களின் பத்திராதிபத்தியத்தின் கீழ் செங்குந்தர் கம்பெனி லிமிட்டெட்டின் ஆதரவில் வெளி வந்து கொண்டிருக்கிறது. செங்குந்த மரபினர் க்ஷேமங் கோரி ஜெனித்த தெனினும், தேசத் தொண்டிற் சிறிதும் பின்னிட்டதாயில்லை. இதை யாம் முற்றும் ஆதரிக்கின்றோம். இது நீடு வாழ்க. 12 பக்கங்களுடையது. வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் 4—0—0-ம், வெளி நாட்டுக்கு ரூ 5—0—0 மாகும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# தெய்வம் என்ன கேள்க்கிறது?

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையிலிருந்து)

பெறுதற்கரிய மானிட சரீரத்தைப் பெற்ற நம்மிடம் தெய்வம் எதையோ எதிர் பார்ப்பது போலவும், அதை நாம் கொடுத்துத் திருப்தி செய்விப்பது போலவும் நாம் நம்பி ஏதேதோ காரியங்களை யெல்லாம் செய்து வருகிறோம்.

அவைகளில் முக்கியமாக நாகரீகம் பெற்ற உலகத்தா ரெல்லாம் கண்டு எள்ளி நகை யாடும் பான்மையில் நாம் செய்து வரும் பலி யிடுவது என்னும் வழக்கமும் ஒன்று.

இவ் வழக்கம் யாரால், எக் காலத்தில், என்ன காரணத்துக்காகச் செய்யப்பட்டது என்பதை ஆராயின் அது வொரு அசங்கியமான கதை என்பதை ஒவ்வொருவரும் கண்டு கொள்ளலாம். அதை இங்கு ஆராய்ச்சி செய்ய வேண்டுவதும் அவசியமில்லை. அவ் வழக்கத்தின் உண்மை எவ்வாறாயினும், பலியிட்டு தெய்வத்தைத் திருப்தி செய்வதென்பது சரியான முறைதானா? பலியென்று சொல்லி ஆடு, கோழி, பன்றி முதலிய பிராணிகளைக் கொன்று அவற்றின் இரத்தத்தை தெய்வம் வசிப்பதாய்ச் சொல்லுகிற ஆலய வாசலில் பெருகவிட்டு அதனாலுண்டாகும் துர் நாற்றத்தாலும், அசுசியத்தாலும் நமது மனதையும், சரீரத்தையும் அசுத்தப்படுத்திக் கொள்வதுதானா தெய்வ ஆராதனை? என்னும் விஷயங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டியது நமது கடமை என்பது நிச்சயம்.

தெய்வம் என்பது எக்காலத்திலும் அழிவற்றதாயும், யாவராலும் உண்டு பண்ணப்படாததாயும், சகல ஜீவராசிகளுக்கும் தநு, கரணம், புவனம், போகம் என்னும் நான்கினையும், அந்தந்த ஜீவர்கள் செய்த நல்வினை, தீவினைகளுக் கேற்பக் கொடுத்து நடத்துவிப்பதாயும், எல்லா ஜீவர்களிடத்திலும் சாட்சி மாத்திரமாய் நிற்பதாயும், ஆனால் அவைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டதாயும், சர்வ வல்லமையும் உள்ளதாயும் உள்ள ஓர் பரம் பொருள். அந்தப் பரம் பொருளே சத்தியாயும், சிவமாயும் நின்று உலகத்தை நடத்தி வைப்பது.

இத்தகைய மகா சத்தியானது சிற்றறிவும், சிறு தொழிலும் உள்ளவர்களாகிய நம்மிடம் எதையாவது பெற்றுக் கொண்டு நமக்கு வேண்டியதைக் கொடுத்துவிடுவதாய் நாம் நம்புவோமானால் நம்மைப் பார்க்கிலும் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதர்களை உலகத்தில் எங்கு தேடினும் காண முடியாது. ஏனெனின், அம் மகா சக்தி உண்டு பண்ணிய இவ் வுலகத்தில் நாம் எவ்வளவு அற்பமான ஜீவன் என்பதை நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும்.

இவ் வுண்மையை உணர்ந்தே நமது சமயாசாரிகளில் ஒருவராகிய சுந்தர மூர்த்தி நாயனார், தமது தமிழ்த் திருமறையில்,

"கொன்று செய்த கொடுமையாற் பல (சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம் பல நீங் (கவே
சென்று சென்று தொழுமின் தேவர் (பிரானிடம்
கன்றினோடு பிடி சூழ் தண்கழுக் குன் (றமே".

என்று கொலையால்—பலி யெனச் சொல்லிக் கொலை செய்வதால் வரும் பாவத்தைப் போக்க சிவ பெருமானது திவ்விய சரணாரவிந்தத்தை இடைவிடாது வணங்கும்படி திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

இதனால் தெய்வம் நம்மிடம் எதையும் வாங்கிக் கொண்டு பதில் கொடுக்கிறதில்லை யென்பதும், நாம் செய்த பாவங்களை [illegible]

# பிரேஸில் நாட்டுப் பெண்மணிக்கு இந்தியாவினிடம் பற்று.

ஸ்ரீ எ. எ. பிண்டோ என்பார் "மாடர்ன்ரிவியூ" பத்திரிகையில் எழுதியிருக்கும் ஒரு கட்டுரையிலிருந்து பின் வரும் விவரங்கள் தெரிய வருகின்றன:—

ஸெஸீலியா மெய்ரெலிஸ் என்பார் பிரேஸில் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி. இவர் அந்நாட்டுக் கவிகளுள் முன்னணியில் நிற்பவராவார். இவர் பல அரிய கவிதைகளும், நூல்களும் இயற்றியிருக்கிறார். கீழ்நாட்டிடத்தும், சிறப்பாக இந்தியாவினிடத்தும் இவருக்கு அளவற்ற பற்று உண்டாம். வேதாந்த மதத்தின் உயரிய இலட்சியங்கள் இவருடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டனவாம். இவர் தமது முற்பிறப்பில் இந்தியாவில் வாழ்ந்ததாக உறுதி கொண்டிருப்பதால் இந்தியாவையே தமது நாடாகவும், இந்திய மக்களைத் தமது உடன் பிறந்தாராகவும் கருதி நேசிக்கிறாராம். இவர் தமது இளம்பிராயத்திலேயே தமக்கு இந்தியாவினிடம் எப்படியோ நேசம் உண்டாகி விட்டதென்று சொல்கிறார். கவி ரவீந்திரநாத் தாகூரிடம் இவருக்கு நன்மதிப்பு அதிகம் உண்டாம். கவியைப்பற்றி ஒரு கட்டுரையும் வரைந்துள்ளார். இந்தக் கட்டுரை எழுதியவருக்கு மேற்படி மாதரசியார் எழுதியுள்ள கடிதத்தில் கடைசி பகுதி வருமாறு:— "முதன் முதலிலே ஆண்டவனைப் பற்றிப் பேசிய வேத காலத்து மகரிஷிகளிலிருந்து, சீதைகள், தமயந்திகள், கிருஷ்ணர்கள், புத்தர்கள், வால்மீகர்கள், காளிதாசர்கள், இன்னும் பெயர் தெரியாத கணக்கற்ற கவி சிரேஷ்டர்கள் இவர்கள் எல்லாருடைய பிரதிநிதியாகக் கருதி உங்களை நமஸ்கரிக்கிறேன். ஆண்டவன் உண்மையையும், ஆன்ம ஞான சௌந்தரியத்தையும் அவர்களே எனக்குணர்த்தினார்கள். உங்கள் நாட்டின் புதல்விகளில் ஒருத்தியாகவே என்னைக் கருதுங்கள். விதியினாலும், காலத்தினாலும் தூரதேசத்துக்கு நான் தூரத்தப்பட்டுள்ளேன். ஆனால் தூரதேசத்தில் பிரிந்து தனியே இருக்கும் போதும் மகிமை பொருந்திய பாரதத்தாயின் உருவத்லதயும், நினைவையும், அன்பையும் என்றென்றைக்கும் போற்றிப் பாதுகாத்துவருகிறேன்!"

---

தெய்வத்தை வணங்கி பாவத்தை மன்னிக்கும்படி மன்றாட வேண்டுமென்பதும், தெய்வம் அன்புடையவர்களுக்கு அருள் செய்யுமே யன்றி, பிற ஜீவராசிகளைக் கொன்று துன்பப்படுத்துவோர்களுக்கு அருள் செய்யாதென்பதும், கொலை செய்து பலியிட்டதால் தெய்வம் திருப்தி யடைந்து விட்டதாய் நினைக்க முடியாதென்பதும், அதனால் பாவமே நமக்குச் சேருகிற தென்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டியதா யிருக்கிறது.

ஆகையால் தெய்வம் நம்மிடம் ஒன்றுங் கேள்க்க வில்லை யென்பதையும், தெய்வம் நமக்கு அருள் செய்ய வேண்டுமானால் நமது மனதில் அன்பைப் பெருக்கி பரிசுத்தமான ஹிருதயத்துடன் எல்லா ஜீவர்களுக்கும் நன்மையையே செய்து வர வேண்டுமென்பதையும் அறிந்து வாழ்க்கையை நடத்த வேண்டுவதே நமது கடமை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கும்.

## இனும்! இனும்!!

படுக்கை யறையை அலங்கரிக்கும் பிரெஞ்சு லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள் 50 எங்களுடைய உயர்ந்த 14 கே. டி. பௌன்டன் பேனா வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் இனும் கொடுக்கப்படும். உடனே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபாய் 1—3—0. விலாசம்:—

கேளரி அண்டு கோ,
22-வது பீட்,
[illegible]

# பைத்தியக்காரப் பேச்சுகள்.

பூசாரியாரே! வயிற்றுவலியாயிருக்கிறது. என்ன செய்வது?

பூ—நம்மள் சுடலை மாடனுக்கு ரெட்டைக் கடா வெட்டிப் பொங்குவதாக நேர்ந்துகொண்டால் குணமாய்ப் போம்.

* *

உடுக்குக்காரரே! காய்ச்சலடிக்கிறது.

எங்கேயோ பயந்து விட்டேனாம் (தனக்குத் தெரியாதாம்). விபூதி போடுங்கள்.

உடு—ஆமப்பா; பயந்துதான் போயிருக்கிறாய். முனியன் சாரியிலகப்பட்டு விட்டாய். அவனுக்கு ஒரு சேவலையறுத்துப் பூசைபோடு.

* *

மகன்—அப்பா! மாமிசம் இனித் தின்னமாட்டேன். இதைப்பற்றி தாங்கள் தொந்தரவுசெய்ய வேண்டாம்.

தக—போக்கிரிப்பயலே! எனக்குப் பெரியவனாகி விட்டாயா? யாரோ சொல்கிறார்களென்று ஞான முற்றிப் போச்சோ? மரியாதையாய்ச் சாப்பிட்டிக்கொண்டிரு.

* *

மூத்தாங்கரே! தங்கள் பெண் குழந்தையை பள்ளிக்கனுப்பவில்லையா?

மூத்—பெண்கள் படிக்கத்தான் நாடு கெட்டுப்போச்சு. பெண்களுடைய நடை யுடை பாவனைகளெல்லாம் பள்ளிக்கூடத்திற்குப்போகவும் மாறிவிடுகின்றன. பிள்ளையைப் படிக்கவைத்துக் கெடுத்துவிட்டானென்ற பேர் எனக்கு வேண்டாமப்பா.

* *

சுப்பன்—சோலை! நாம் பறையராச்சு. நாட்டுக்குள் நாம் எல்லாருடனும் தொட்டுப் புழங்கிக் கொள்ளவேண்டுமென்று பேச்சாய்க் கிடக்கின்றது. நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது.

சோலை—அப்பா! ஐயமாரையும் தொடவா? தலைதெறித்துப் போகாதா? நம்முன்னுள்ளவர் வழக்கத்தை மீறப்படாது. உலகத்தில் என்னமோ புரளி நடக்கப் போகிறது.

* *

வெங்குவய்யரே! நீர ஆலாசிக்கத் தீண்டாமை தீதென்றே தெரிகிறது. ஆனதால் அதை நான் விலக்கிவிட்டேன். தாங்களும் விட்டுவிடுங்கள் என்றார் ரமணய்யர்.

வெங்—நன்றாயிருக்கிறது ரமணய்யரே! உன்போன்றாரால்தான் பிராமணர் மதிப்புப் போச்சு. வேதம் சொல்வ தென்ன? சூத்திரப்பயல்களைத் தீண்டிவிட்டு தோஷத்திற்காளாக மாட்டேன்.

* *

மகன்—அப்பா! யாரோ ஒரு சாமியார் பிரசங்கம் செய்கிறார். பார்த்துவிட்டு வரப்போகிறேனப்பா.

தகப்பன்—இந்த வயதிலேயே உனக்கொரு பிரசங்கம். ஆட்டுக் குட்டிக்கு இரையை எடுத்துப் போடடாப்பா.

* *

ஐயா! பையன்களெல்லாம் கதர் வேஷ்டியுடுத்தி வருகிறார்கள். எனக்கும் ஆசையுண்டு. அந்த வேஷ்டி வாங்கித்தாருங்கள் என்றான் மகன்.

தகப்—நாட்டில் பைத்திய காரர்கள் பெருத்துவிட்டார்கள். எங்கேயோ காந்தி யென்றொருவன் சொல்லிக் கொண்டிருக்கிறானாம். அதைக்கேட்டு ஜனங்கள் இப்படிக் கோலமழிந்து வருகிறார்கள். அந்த வியாபாரம் நமக்கு வேண்டாம்.

* *

கேள்வி—பாபு! குழந்தைக்குக் கல்யாணம் என்றீரே; வயது எத்தனை?

பதி—5 வயது...இன்னுமாகவில்லை.

கே—இதேனிப்படித் துரிதம்?

[illegible] வுக்கெவ்வளவு துரிதமாய் நடக்கிற[illegible]தோ அவ்வளவுக்கவ்வளவு துன்பமில்லை.

* *

கேள்வி—தங்கள் பையனைப் பள்ளிக்கனுப்பவில்லையா?

பதில்—ஆமாம்: எல்லாரும் படித்துத்தான் சாப்பிடுகிறார்களோ? பள்ளிக்கூடத்தில் போய் உபாத்தியாயரிடம் அடிவாங்கவா? சிவசிவாவென்று வீட்டிலுண்டான வேலையைப் பார்த்து வந்தால் போதும்.

* *

கேள்வி—என்டாப்பா உன்மனைவியை இன்று அடித்துவிட்டாயாம்?

பதில்—எந்நேரமும் புஸ்தகமும் கையுமாயிருக்கிறாள். வீட்டு வேலை முடிந்ததும் அவளுக்கு அதுதான் வேலையாயிருக்கிறது. படியாதே படியாதேயென்று எத்தனை நாளைக்குத் தான் சொல்லிப்பார்ப்பது?

---

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

நடவையில் 9 பேரும் இரண்டாவதில் 7 பேரும் கடைசியாக 5 பேரும் நம் குலப் பிரதிநிதிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். சுமார் 10000 ஓட்டர்களுக்கதிகமானவர்களிருந்தும் கடந்த எலெக்ஷன்களில் நம்குலப் பிரதிநிதிகள் குறைந்துகொண்டே வந்திருக்கிறார்கள். கவனிக்குங்கால் நம்மவரின் அஜாக்கிரதையும் ஒத்துழையாமையும் பிற சமுகத்தினர்க்கு ஓட்டுக் கொடுத்தமையும் நன்கு தெரிய வருகிறது. நமது குறைகளையும் கஷ்டநஷ்டங்களையும் நங்குலப் பிரதிநிதிகள் இருந்து எடுத்துரைத்து வாதித்து நமக்கு நன்மை செய்யக் கூடுமேயன்றி மற்றவரால் கூடாது. அவரவர் தம் தம் ஜாதிப் பற்றுடையவர்களாக இருக்கின்றனர். அவ்வாறே நாமும் நமது ஜாதி முன்னேற்றத்திற்கென்று உழைக்க வேண்டுமல்லவா?

**அன்பார்ந்த நங்குல ஓட்டர்களே!**

நீங்கள் யாவரும் ஒருமனப்பட்டு ஏக சம்மதமாயும் மனப் பூர்வமாயும் குலாபிமானத்தோடு உங்கள் ஓட்டுகளை குறிக்கப்பட்ட போலிங்களுக்குச் சென்று நமது குலப் பிரதிநிதிகளுக்கே கொடுக்கும்படி உங்களை அன்புடன் வருந்தி வேண்டிக் கொள்ளுகிறேன்.

**நாடார் குல தனவான்களே!**

சீக்கிரத்திற்குள்ளாக ஏற்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அந்தந்த பிர்க்காக்களுக்கு நியமித்து வேண்டும் வேலைகள் செய்து அதிகமான நம்குலப் பிரதிநிதிகள் இத் தேர்தலில் சித்தி பெற ஏற்பாடு செய்யுங்கள். நம் நோக்கம் இனிது நிறைவேற பரம் பொருளே திருவருள் பாலிப்பாராக.

ஓர் நாடார் குல நண்பன்.

# தேவை.

கோவில்பட்டி தாலுகா குளத்தூர் நாடார் ஸ்கூலுக்கு ஸெக்கண்டரி கிரேடு ட்ரெயின்டு உபாத்தியாயர் ஒருவர் தேவையா யிருக்கிறது. ஸ்தானம் விரும்புகிறவர்கள் 16—2—28-க்குள் தங்கள் அப்பிளிக்கேஷன்களை அடியிற் கண்ட விலாசத்திற் கனுப்பவும்.

விலாசம்:—

வெற்றிவேல் நாடார்,
மானேஜர், "நாடார் ஸ்கூல்",
குளத்தூர்.

---

பிடிவாதக்காரர்கட்கு கோபம் வெகு துரிதம். தங்களை யனுசரிக்கிறவரையுமே பிறர் மீது அவர்கள் பிரியம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection